
அகண்டஏகரஸம்!ௐ
அகண்டஐக்கியரஸம்!!
இதழ் 1
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# அகண்ட ரக ரஸம்!
# அகண்ட ஐக்கிய ரஸம்!!

## இதழ் 1

**வெளியீடு :**
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : (04256) 227655

முதற்பதிப்பு : அகண்டஜோதி யாத்திரை வெளியீடு
செப்டம்பர் 27, 2011


பிரதிகள் : 350

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 2 |
| 2 | பாடல் 1 | 5 |
| 3 | பாடல் 2 | 7 |
| 4 | பாடல் 3 | 8 |
| 5 | பாடல் 4 | 10 |
| 6 | பாடல் 5 | 11 |
| 7 | பாடல் 6 | 13 |
| 8 | பாடல் 7 | 14 |
| 9 | பாடல் 8 | 16 |
| 10 | பாடல் 9 | 17 |
| 11 | பாடல் 10 | 19 |
| 12 | பாடல் 11 | 21 |
| 13 | பாடல் 12 | 23 |
| 14 | பாடல் 13 | 24 |
| 15 | பாடல் 14 | 26 |
| 16 | பாடல் 15 | 28 |
| 17 | பாடல் 16 | 29 |
| 18 | பாடல் 17 | 31 |
| 19 | பாடல் 18 | 32 |
| 20 | பாடல் 19 | 33 |
| 21 | பாடல் 20 | 35 |
| 22 | பாடல் 21 | 36 |
| 23 | பாடல் 22 | 39 |
| 24 | பாடல் 23 | 40 |
| 25 | பாடல் 24 | 42 |
| 26 | பாடல் 25 | 43 |
| 27 | பாடல் 26 | 45 |
| 28 | பாடல் 27 | 47 |
| 29 | பாடல் 28 | 48 |
| 30 | பாடல் 29 | 50 |
| 31 | பாடல் 30 | 51 |

| வரிசை எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 32 | பாடல் 31 | 53 |
| 33 | பாடல் 32 | 55 |
| 34 | பாடல் 33 | 58 |
| 35 | பாடல் 34 | 59 |
| 36 | பாடல் 35 | 62 |
| 37 | பாடல் 36 | 65 |
| 38 | பாடல் 37 | 67 |
| 39 | பாடல் 38 | 68 |
| 40 | பாடல் 39 | 70 |
| 41 | பாடல் 40 | 72 |
| 42 | பாடல் 41 | 74 |
| 43 | பாடல் 42 | 75 |
| 44 | பாடல் 43 | 76 |
| 45 | பாடல் 44 | 77 |
| 46 | பாடல் 45 | 80 |
| 47 | பாடல் 46 | 82 |
| 48 | பாடல் 47 | 83 |
| 49 | பாடல் 48 | 85 |
| 50 | பாடல் 49 | 86 |
| 51 | பாடல் 50 | 87 |
| 52 | பாடல் 51 | 89 |
| 53 | பாடல் 52 | 90 |
| 54 | பாடல் 53 | 93 |
| 55 | பாடல் 54 | 94 |
| 56 | பாடல் 55 | 96 |
| 57 | பாடல் 56 | 98 |
| 58 | பாடல் 57 | 99 |
| 59 | பாடல் 58 | 101 |
| 60 | பாடல் 59 | 102 |



(ஸத்திய வாக்கு) 1

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடிரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீராம்குரு திருவடி துணை"!
"நம்பினோர் கெடுவதில்லை"!
"தெய்வம் மனுஷ்யாணம்"!
"யத் பாவம் தத் பவதி"!
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்",

ஓம்!!!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்,
அகமே எல்லாம்!"
"ஜெகம், பரமும், ஜீவர்களும்,
சூழும் இல்லை"!
"அடங்கு"! "அடக்காதே"!!



# மு....க....வு....ரை!

ஓம் ஆத்மானந்தக் குழந்தைகளே!
சொல்! செயலால்! அடக்கமும்! அதனால்
பொறுமையும்! அதனால் பணிவும்! அதனால்
விட்டுக்கொடுக்கவும்! விட்டு விலகவும்! உள்ள
சகிப்புத்தன்மையும்! அதனால் எவ்வோரும்!
நல்லவர்களே! என்றும் நம்மவர்களே


எல்லாம் **நலமே** என்ற **அபேதத்திருஷ்டியும்!** இயல்பாக பெற்ற தன்மையினால்
எல்லாம் பொம்மைகளே! எல்லாம் பொம்மலாட்டமே!
(விதி & மதியால் நடைபெறும் ஓர் நாடகமே!)

எல்லாம் மண்மயமே! மண்ணாகிய மரமே!
மரமாகிய யானையே! யானையாகிய மரமே! என்ற,

**சர்வாத்ம பாவனையால்!**
ஜீவன் முக்தி அடைவீர்கள் (அடைந்து விட்டீர்கள்)
என வாழ்த்தி ஆசி வழங்குகிறோம்.



குழந்தைகளே! இந்த சிவரகஸ்யம்!
என்ற ஸ்ரீமத்ரிபுகதையின்!
மறுஉருவான ஸிவயநாறுறுபவம்!
என்ற நூலுக்கு, பலவடிவங்களிலும், பலநிலைகளிலும், உரையாடல் சற்று வேறு வேறாக இருந்தாலும், கருத்து! ஒன்றுபட்ட நிலையில், பலப்பல நூல்கள் இதுவரை, அவன்! கருணையினால், வெளிவந்தன என உணர்க. இந்த நூலும் அதே நிலையில் அமைந்தாலும், எளிய! இனிய! இயல்பான முறையில், ஞஸாம் ஸத்தை! மட்டும் உடையதாக இந்நூல் அமைகிறது என மட்டும் உணர்க. வேதாந்த நூல்கள் பலப்பல நூற்றுக்கணக்கில் இருந்தாலும்,



இந்த சிவரகஸ்யம் ஒன்றே

ஆதிக்கும் ஆதிமூலம் ஏனை

ஆதி ப்ரம்மஞானிகளின் திருவாக்காக அறிகிறோம்.

பர அம்பமான அந்த ஒருவனும்

இதுவரை வந்ததும் ஏழு வரவிலும்

இந்த ஒன்றையே தொட்டவனாகிறான்.

அவன் தொட்டவரையும் விட்டதில்லை.

இந்நூலை அனுபவித்து சுவைத்தவரையும் அவன் விட்டதில்லை

"உபதேசிப்பவர் திருஷ்டியில் பட்டவரையும்"


சேவையில் ஆழமையாக மயமானவர்களையும் அவன் விட்டதில்லை

இந்நூலைப் பெற்றவர்கள் மாபெரும் பாக்கியசாலிகளாகும்

இந்நூலை சுவைத்தவர்கள் ஜீவன் முக்தர்களாவர்.

தஞ பாபா

பாடல் 1




1

சுத்த ஸித்தாந்தமதாய் எந்த வஸ்து;
சுதந்திரமாய் தமதுபர சக்தியோடு;
பக்தரெல்லாம் உய்யும் வண்ணம் கருணையாலே;
பரதத்வ வடிவாக திரண்டெழுந்தே;
அத்வைதானந்தம் உணர அநுபவத்தின்;
அதிசயமிங்கு எல்லோரும் உய்யும்வண்ணம்;
நித்தமுமே ஆனந்த நடனம் செய்யும்;
நிதம் அந்த வஸ்துவினை நினைவில் வைப்போம்.

கருத்து :- காலாதீத பரசொரூபமாக இருக்கின்ற ஒன்று, தான் சுதந்திரமாக தம் மாயாவினால்; மற்றொன்றாய் பிரகாசித்தது. அது பக்தர்கள் & ஞானிகளுக்காக வந்தது என உபசாரமாக சொல்லுவாம். (உண்மையல்ல).





அது எப்படி வந்தது என்றால்? பரதத்துவம்
(பரதத்துவம் வடிவாக)
பரம்பொருளே பரமாத்மாகவும் ஜீவாத்மாகவும்
வடிவம் தாங்கி வந்தது என கொள்க.
ஏன் வந்தது என்றால்? அறிவின் நிலையில்,
விளையாட வந்தது எனத் தெளிக. ஆனால்?
மனோ நிலையில் துக்கமாக தோற்றுகிறதென அறிக.
அந்த ஒன்றே ஸத்தியமென நினைவில் வை.
மற்றும் நாமரூபமெல்லாம் சிப்பியில்
வந்த வெள்ளியை துச்சமாய் தள்ளு.
ஸத்தே ஸித்தாக இருந்து விளையாடுகிறது.
ஆகவே எல்லாம் ஸத் ஸித் ஆனந்தமே.



அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே
அழியாமல் இருப்பதனால் ஸத்தும் ஆகும்.
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே;
அனைத்தையுமே விளக்குவதால் சித்தும் ஆகும்;
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே;
அகிலர்க்கும் பிரியமதால் சுகமும் ஆகும்.
அறிவுருவாய் அமைவுற்ற ஆன்மாதானே;
அந்தம் இல்லாதிருப்பதனால் அனந்தமாமே.

கருத்து :— அறிவே ஆன்மா | ஆன்மாவே அறிவு |

அவ்வான்மாவே அசையாமல் எதையும் எவரையும்
அசைக்காமல் இருப்பதால் ஸத்தும் ஆகும்.
அது எல்லாமாய் விளங்குவதால் | விளக்குவதால் |
சித்தும் ஆகும்.



அதுவே ஜீவநிலையில் இன்பதுன்பமாயும்!

(மனோநிலையில்)

(அன்புநிலையில்) ஈசநிலையில் ஆனந்தமாயும்!

இருப்பதாலும், ஆனந்த சொரூபமாகும்.

அதுவே முடிவற்றதாய் விளங்குவதாயும்,

துலங்குவதாயும், அனேகமாகும் என அறிக.


இது ஸத் ஸித் ஆனந்தமாகும்.

—x—x—x—x—x—x—x—

**3**

ஆன்மாவில் கல்பிதமாய் காண்பதெல்லாம்,
ஆன்மாவுக்கு அயலாக ஒன்றும் இல்லை.
ஆன்மாவுக்கு அயலாக பிரம்மம் இல்லை.
அப்பிரம்மம் நமக்கயலாய் ஆன்மா இல்லை.
ஆன்மாவே பிரம்மம்தாம் பிரம்மம் தானே,
ஆன்மாவாம் அணுவும் இதில் ஐயமில்லை.
ஆன்மாவாம் அகம்பிரம்மம் என்றெப்போதும்,
ஆன்ம பர ஐக்கியமே அறிய வேண்டும்.

பாடல் 3



கருத்து :— மனித இனம் உட்பட 84 லட்சம் தாவரங்களும், ஜீவ கோடிகளும்; (உறவு, சுற்றம், நட்பு, பொன் பொருள் போக போக்கியங்களும்,) நாம......ரூபமாக......தோற்றம்......அனைத்தும், மண்......இல்லாமல்......பாண்டம்......இல்லை.

ம ண் ணி ல் பா ண் ட ம் இ ல் லை,

என்ற நியதியில், பரம் என்ற ஆன்மா இல்லாமல், இவைகள் இல்லை. இ வை க ளி ல் பரம் என்ற ஆன்மா/ நா ம ரூ ப மா க இ ல் லை.


ஆனால் அ து வா க (மண்ணை) இ ரு க் கி ற து.

ஆன்மா இல்லாமல் எவரும்/எதுவும்/ இல்லவே இல்லை.

எவரும்/எதுவும்/ என்ற நாமரூபம் அதில்

ஜீ வ/ ஆ ன் ம/ பர/ ஐக்கியம்.

10




4

விரிந்த ஜகத் காரணமாம் விதிஇல்லாததால்;
விசித்திரமாய் பகுப்புற்ற ஜகத்தே இல்லை.
நிரந்தரமாம் ஜகத்தில்லா தன்மையினால்;
தயங்கும் ஜகத் பாவகனும் ஹரியும் இல்லை.
பொருந்தும் சராச்சரம் எவையுமில்லாமையாலே;
புகலும் ஜகன் நாசகனும் ஹரனும் இல்லை.
நிரந்தரமாய் நிறைவுற்ற ஆன்மா ஒன்றே;
நிச்சலமாய் நிலைத்ததென நிச்சயிப்பாய்.

கருத்து :- பரந்து விரிந்த இந்த ஜகம் (ஜீவதோற்றம் & தாவரங்கள்) நாம ரூபமாக இல்லாமையினால் படைக்கும் பிரம்மனும் அவனைச் சார்ந்த, வினை & விதி இல்லையென்றே சொல்லலாம். நாம ரூபமாக உலகம் இல்லாமையினால் அவைகளை ரக்ஷிக்கிறேம் எனச்சொல்லும்.

பாடல் ௪



11


நாராயணனும்! இல்லையன்றோ சொல்லுவாம்.
படைக்கும் கர்த்தாவும்!
காக்கும் கர்த்தா(வும்)! இல்லாமையினால்
நாமரூப மாற்றம் மறைவு (அழிவை)
செய்யும் சிவபெருமானும்! இல்லவே இல்லை.

ஆனால் மேலே கூறிய மூவரும்! கர்த்தா
வாக இல்லை. ஸத்குருவாக இருக்கிறார்கள்.

இது ஜக! ஜீவ! பர! ஐக்கியமாகும்.

5 அந்தமில்லா
தன்மையினால் ஆதி இல்லை.
ஆதியில்லாத் தன்மையினால் அந்தம் இல்லை.
சொந்தம் இல்லாத் தன்மையினால் தோற்றம் இல்லை.
தோற்றம் இல்லாத் தன்மையினால் சொந்தம் இல்லை.


12



பந்தம் இல்லாத்தன்மையினால் வீடும் இல்லை.
பரவிய வீடு இன்மையினால் பந்தம் இல்லை.
சந்ததமும் சின்மயமாம் ஆன்மா ஒன்றே
சலியாத வஸ்துவென நிச்சயிப்பாய்.

கருத்து:— காலாதீத அந்த ஒன்றுக்கு
தோற்றம் / இருப்பு / மறைவு / என சொல்லும்
எதுவும் / எவரும் / நாமரூபமாக
இல்லவே இல்லை. ஆகையால் ஆதி & அந்தம் இல்லை.


தோற்றம் இல்லாமையினால், சொந்தம் இல்லை.
சொந்தம் ” , தோற்றம் ” .
” ” பந்தம் ” .
பந்தம் ” ஜீவன் முக்தி என்று
மோக்ஷ வீடும் இல்லை.



13

ஒந்த விருடியும்! எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்!
நாமரூப தோற்றம்! இருப்பு! மாற்றம்!
மறைவற்ற! அசைவற்ற! சலனமற்ற!
காலாதீத பரமே! இருக்கிறது எனஉறுதிகொள்.
இஆ ஆதி! அந்தம்! சொந்தம்! பந்தம்!
மோக்ஷமற்ற அகண்டானந்தமே.

6
பயன்எவையும் விரும்பாமல் பலஜன்மத்தில்,
பழுதறவே அனுஷ்டித்த அறங்களாலே,
அயல் அணுவும் மருவாமல் மனதின் சுத்தி,
மன்னியதால் சாதனம் ஓர் நான்கும் பெற்றோர்,
இயல்புடனே இயற்றியிடும் சிரவணாதி,
ஏதுவினால் பரப்பிரம்ம ஞானம் பெற்று,
அயல் அணுவும் அணுகாத அகண்ட ஞான,
அத்வைத பரப்பிரம்மம் ஆவரன்றே.






கருத்து :- பலபல ஜன்மங்களில் செய்த பலன் கருதாத தர்மத்தாலே சுகிர்தத்தால் சித்த சுத்தியும்! அதனால் மனப்பரிபாகமும்! பெற முடியும். அதனால் தமக்கு அயலாக ஏதுவும் எவரும்! இல்லாத நிலை பெற முடியும். அதனால் அதுக்கு உவமை இல்லாத பிரம்ம ஞானம்! பெற முடியும். இது பயன் கருதா கர்ம & பக்தி யினால் பெறும் ஞானம் ஆகும்.

---

(7) இத்துவைத ஜகத்ததனையும் விவகாரத்தில்;
யாவர்க்கும் (எதிர்) எதிராய் தோற்றலாலே;
ஸித்தினது விவர்த்தமதாம் சித்தம் தானே.
ஜகமெனத் தோற்றுகிறதெனச் சிலர் சொல்வர்.
சித்தமதை நன்றாக விசாரிக்குங்கால்;
ஸின்மயமாம் பிரம்மமலால் இலவே இல்லை.
புத்திரனே! ஆதலினால் எக்காலத்தும்;
பூரணமாய் உளது பரப்பிரம்மம் ஒன்றே.

## பாடல் 7



(15)

கருத்து :— பேசிப்பேசிப் பேசியே! இல்லாத உலகை!
இருப்புடையதாக நம்பி ஏமாந்துகொண்டிருக்கிறோம்.

இ வ் வு ல க ம் வி வ ஹா ர ஸ ந் தி ய மே.

பேச்சைக் குறைத்து நிறுத்தப்பழகினால் உலகம் இல்லை.
கொடுப்பதையும்! வாங்குவதையும்! போவதையும்!
வருவதையும்! குறைத்துநிறுத்தப் பழகினால் உலகம் இல்லை.


ஸித்தே! சித்தமாய்! வடிவெடுப்பதால்! உலகம் தோன்றுகிறது.

ஸித்தை (அறிவை) சித்தமாக (மனமாக)
மாறாமல், கண்காணிப்புடன் இருந்தால் உலகம் இல்லை.

ச ர் வா ர் ப் ப ண மே! இதன் உபாயமாகும்.

இ ரு ப் ப து ஒ ன் றே! ந ட ப் ப து ந வ மே!!

என, திட உறுதிபூண்டு கல்லைப் போல் இருந்துகொண்டு
போவதிலும்! வருவதிலும்! கொடுப்பதிலும்! வாங்குவதிலும்!




போதும்
என்ற
நிறைவுடன்
சபலம்! சலனம்! சஞ்சலம்! சங்கடம்!
இல்லாமல்; சாட்சியாய் இருக்கப் பழகிக்
கொண்டால் இன்பதுன்பமில்லை. ஆனந்தம் உண்டு.
இது சாட்சி பாவனையின் கருத்தாகும்.

x—x—x—x—x—x—x—x—

8 புத்தியினால் உறுதியிடும் யாருளும் இல்லை.
புரைமனதால் மனனமிடும் ,, ,, .
சிந்தையினால் சிந்திக்கும் ,, ,, .
செறிவாக்கால் வசனிக்கும் ,, ,, .
சொந்தமதாய் தோற்றியிடும் ,, ,, .
துவைதத்தால் தொடர்கின்ற பயமும் இல்லை.
சந்ததமும் ஸன்மாத்ர சுபாவமாகி;
சலியாமல் உளது பரப்பிரம்மம் ஒன்றே.

கருத்து :- மனம்! புத்தி! சித்தம்! ஆகிய
இவை மூன்றினையும்; எண்ணம்! சொல்! செயலில்!


பாடல் 8




பிரவர்த்தி (புற விருத்தி) யினில்
தோற்றம்! இருப்பு! மாற்றம்! மறைவினை;
காணும்; சொந்தம்! பந்தம்! பாசம்! பற்றினை;
தொடரும்; நாம! ரூப! ஜக! ஜீவ! முதலிய
எல்லாவற்றினையும். பிணையும் துவைத பயம்
இல்லவே இல்லை!
இது சொந்த! பந்த! பாச! பற்றின்! தொடர்பை அறுப்பதாகும்.

(9) நினைவெதுவோ அதுதானே ஜீவன் ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | ,, | ஈசன் | ,, | . |
| ,, | ,, | ஜகமும் | ,, | . |
| ,, | ,, | மனதும் | ,, | . |
| ,, | ,, | காமம் | ,, | . |
| ,, | ,, | கர்மா | ,, | . |
| ,, | ,, | துக்கம் | ,, | . |
| ,, | ,, | அனந்தம் | ,, | . |





கருத்து :- ஸங்கல்பமே உலகம் ஆகும்.

ஸங்கல்ப ரஹிதமே மோக்ஷம் ஆகும்.

எண்ணமே உலகம். எண்ணமற்ற ஏகாந்தமே மோக்ஷம்.

ஜீவ வாசனை என்றும், ஈச வாசனை என்றும்,

இருவகையில், எண்ணத்தை பிரிக்கலாம்.

ஜீவ வாசனை அனேக குணம் என்றும், ஈச வாசனை

ஏக குணம் என்றும் சொல்லலாம்.

ஜகவாசனை என்பது புண்ணிய பாப ஜனன மரணம்


என்றும், ஈச வாசனை ஸத்திய தர்மத்தோடு

கூடிய பதமுக்தி என்றும் சொல்லலாம்.

அவ்விரண்டுமே ஜீவன் முக்தி ஆகாது.

அது ஜீவ & ஈச குறைபவம் ஆகும்.

19



10

நினைவின்றி நிற்பதுவே அகண்டமாகும்.

,, ,, நிஷ்டையாகும்.

,, ,, ஞானம் ஆகும்.

,, ,, மோக்ஷம் ஆகும்.


,, ,, சகஜ(ஞானம்)ஆகும்.

,, ,, பிரம்மமாகும்.

,, ,, சிவமும் ஆகும்.

நினைவணுவும் இல்லையெல்லாம் பிரம்மந்தானே.


கருத்து:— இப்பாடலில் ஓர் அரிய கருத்து மறைந்திருக்கிறது. அதாவது:— நாம ரூப ஜக ஜீவஎண்ணம் இருந்தால் அது தோஷ எண்ணம் ஆகும். அது புண்ணிய பாப! ஜனன மரண எண்ணமாகும். அவ்வெண்ணம் நசித்து, ஏக-எண்ணமாகிய ஏகஸத்வ குண எண்ண வாசனை வேண்டும்.



அந்த ஒரு எண்ண குணத்திலே! அனேக எண்ண
குணவாசனை நசிக்கும். அந்த ஒரு எண்ண
குணவாசனையும், நசிப்பதற்கு
அதுவே நாம்! நாமே அது! என்ற
ஓர் எண்ண உணர்வை பெருக்க வேண்டும்.
இந்த பிரம்மார்ப்பண எண்ணம்!
பெருகவில்லையானால், அங்கு வெற்றிடம்
வெறுமை என்ற சூனியம் நிறைந்து விடும் என
ஸ்ரீமஹான்கள் சொல்வர். இந்த உணர்வும்,
பிணம் சுடும் தடிபோல, ஸ்வயஅநுபவ
நிலையில் நாசமாகும் என உணர்க.

## பாடல் 10






அகம் பிரம்மம், பிரம்மம் அகம் என்ற உண
ர்வின் ஸ்வய அநுபவம்
ஜீவன் முக்தி, பெறும் வரை இருக்க வேண்டும்.
இது கலி தோஷ முடிவு காலமாக இருப்பதால்
எண்ணமற்ற நிலையிலும், இப் பேருணர்வு
அவசியம் வேண்டும்.
இப்பாடல் பேரறிவின் நிலையாகும்.

குறிப்பு:— நினைவின்றி நிற்பதற்கு,
பேருணர்வோடு இருக்க வேண்டும். இது
எண்ணமல்ல. இதுவே பேரறிவாகும்.

×—×—×—×—×—×—×—×

**11**


திருசியமே ஒன்றுமில்லாத் திருக்கேயாகி;
இயங்கும் மனோவிகற்பமில்லா நிலைநின்றோர்க்கு;
மருவியிடும் நனவு கனா சுழுத்தி இல்லை.
மரணமில்லை. உய்வதில்லை. மற்றொன்றில்லை.



22

பிரிவறவே மனது வெறித்திருக்கும் நிஷ்டை யின்
பெருமையினையென் சொல்வோம் என்றிவ் வண்ணம்;
பரிவுடனே ரிபு முனிவன் நிதாகனுக்கு,
பரமார்த்த உறுதியினைப் பகர்ந்தானன்றே.

கருத்து:- காண்பான் காட்சி இல்லா நிலையிலும், (நனவில் சுழுத்தி நிலையிலும்) ஜாக்ர அயக்த நிலையில், குற்றமற்ற நிலையிலும், நிலைபெற்று நின்றவர்க்கு மரணம் என்ற பவ பந்தமும் இல்லை. அதிலிருந்து உய்வடையும் மார்க்கமும் இல்லை. அப்படிப்பட்ட பக்குவ ஆன்மாவின்! மஹிமையை, அந்த ஆதிசேஷனாலும்! திரிமூர்த்திகளாலும்! உரைக்க முடியாது என ஸ்ரீ வேதகுரு சொல்கிறார். இது நனவின் சுழுத்தியை வலியுறுத்துகிறது.




௨௩

1௨

எள்ளவும் அயலின்றி எல்லாம் என்றும்,
ஏக பரப்பிரம்மமதாய் இருந்தபோதும்,
கள்ளமுறும் மனதுடையோர் பரசிவத்தின்,
கருணையில்லாக் குற்றத்தால் வேறுவேறாய்,
உள்ளமதில் உணர்ந்து பவதுக்கத்தை,
உறுவதனல் மூட்களெல்லாம் எவ்விதத்தும்
தள்ளவொண்ணாப் பரமசிவம் கருணைபெற்றே,
தமதுபவதுக்கத்தைத் தவிர்க்க வேண்டும்.

கருத்து:— ஊசிநாட்டிடமில்லாமல் நாமே எங்குமாய், ஏகமாய், எல்லாமாய், நிறைந்திருந்தபோதும்; நம் கள்ளமனதின் பிடியில் சிக்கிக் கொண்டதால், பரசிவத்தின் கருணையை பெற முடியவில்லை. சர்வார்ப்பண நல்கி அந்த பரமசிவத்தின் (ஸ்ரீபகவானின்) கருணையை!




24

பெற்றுவிட்டால், கள்ள மனமானது!
நல்ல மனம் (அறிவு) ஆகிவிடும். ஆகியே
தீர வேண்டும். ஆகவே நம்மை விட்டு விலகாத,
விலக்காத ஸ்ரீபகவானின் கருணையை முதலில்
பெற வேண்டும் என உணர்க (பின் பர உணர்வைப் பெறமுடியும்)
ஸ்ரீபகவானின் கருணையை பெறாமல் பரநிலையை அடைய முடியாது.


×——×——×——×——×——×——×

(13) சித்தமென ஒருவாருளிங்கு உள்ளதென்று; (நீ)
சிறிதேனும் சிந்தித்தால் உடனே (உன்)னிடத்தே,
சித்தமதாய் தோன்றியிடும் (பின்) அதுவே ஜீவ,
ஜக, பரமாய் தோன்றுவதால் துன்பம் உண்டாம்.
புத்திரனே! ஆதலினால் சித்தம் என்றோர்,
பொருளொன்றும் இல்லையெல்லாம் ஸித்தேயென்றும்,
இத்திறமான உறுதியினால் சித்தம் தன்னை,
எளிதாக ஜெயித்தென்றும் ஆனந்தம் அடைவாய்.

பாடல் 13




கருத்து:- மனம், புத்தி, சித்தமென ஒன்று
இல்லவே இல்லை. உன்னுள் உள்ள உன் ஸித் சொரூபமே
மனம், புத்தி, சித்தமென வந்ததென்று உணர்க.
அப்படி வந்த சித்தமே நாம ரூப ஜக ஜீவ
பரமாய் (தெய்வீகமாய்) வந்து, உன் சித்த (மன)
குற்றக் கற்பனையாய் விசனம் அடைந்து,
சலிப்படைந்து இன்ப துன்பத்தை கொடுக்கிறது
என உணர்க.
ஆகவே நாம ரூப அனைத்து குற்றக் கற்பனையையும்
விடுவாயாக. அதன் மார்க்கம் எல்லாம் நீயே,
எல்லாம் உன்னுள், எல்லாம் உனதே, என்றல்
சித்த, ஜீவ, கர்த்ருத்வம் நாசமாகும்.
மறுவிடை எல்லாம் ஒன்றே, அது வேறாம், நாமே அது,
என்ற பிரம்மார்ப்பணத்தால் ஜீவன் முக்தனாகலாம்.
இது சித்தத்தை ஸித்தாக மாற்றும் உபாயம்.




உ

14

நரர் சுரராய் திரியக்காய் நகவறதி,
நாநாவாய் நாடியிடும் நாட்டமெல்லாம்,
நேரிஉருவாய் திகழ்கின்ற தேவதேவன்!
திருவுருவே என்று திடத்தியானம் செய்து,
இருகுணமும் இழந்து அமலஸத்வம் மேவாய்,
இருக்கின்ற சூட்சுமமனை விருத்திகொண்டு,
பரமசிவம் பரிபூரண சொரூபம் தன்னை,
பார்த்திடலாம் மற்றொன்றால் பார்க்கவொண்ணு.

கருத்து:— உன் உபாசனமூர்த்தியை நீ நேரில் தரிசிக்க வேண்டுமென்றால், ஒரே வழி! மனித இனமும் உட்பட, 84 லக்ஷம் ஜீவ வர்க்கங்களில் அந்தந்த வேஷம் தாங்கி அவரவர்! அதனதன் கர்மகாரியங்களை எக்குறையுமின்றி பாரபக்ஷ தோஷமின்றி நம் ஸ்ரீ பகவானே! நடத்துகிறான் என்றும், நடிக்கிறான் என்றும்,

பாடல் 14



27

திட உறுதியினல் நம்பி,

ரஜோ, தமோ, குணங்களை சர்வநாசம் செய்து

ஏக குணமாகிய ஸத்வம் (தனை)

(பொறுமை, பணிவு, அன்பு, கருணை) இவைகளை ஏற்றுக் கொண்டு

உள் இருப்பை உணர்ந்து ஏற்றுக் கொண்டு

வெளிக், காட்சி, நிகழ்ச்சிகள், மறந்து,

இது நம் ஸ்ரீ பகவானே! எனத் தெளிந்தால்,

அவஸ்யம் ஸ்ரீ பகவான் காட்சியைப் பெற முடியும்.

நிதரிஸன காட்சி, இதுவே.


வேறு எந்த சாதனையும் இக்கலியில் ஸாத்தியமாகாது.

இது இவ்வற ஞானிகளின் ஸ்வய அனுபவமாகும்.

இது ஸ்ரீ பகவத் காட்சியின் ரகஸ்யமாகும்.

---


நிதரிஸனம் = நேருக்கு நேராக தரிஸிப்பது.




மித்தையென்றும் சித்தமுமே என்றுமில்லை.
மிகப் பொய்யாம் ஜகமுதலும் " .
மித்தையென்றும் வார்த்தையுமே " .
மிகமிகவும் மூடரென்றும் ஜனமும் இல்லை.
ஸத்திய ஸித் சுகபரமே எல்லாம் என்றும்;
சந்ததமும் அப்பிரம்மம் நாமே என்றும்;
இத்திறமாம் திடமான முயற்சியோடு;
எப்போதும் சிந்தித்து சாந்தனாவாய்.

கருத்து :— பொய்யான சித்தம் இல்லவே இல்லை.
ஸித் பரமாகிய ஸித் சொரூபமே என்றும் உள்ளது.
பொய்யான நாம ரூப ஜக ஜீவ தோற்றமும் இல்லை.
பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! இருக்கிறது.
பொய் என்ற வார்த்தையும் வாயும் இல்லை.
மஹத்தின் பிரணவாஹார ஓசையே உள்ளது.


## பாடல் 15



29


முழுமூடரென்றும்; மஹாபாபி என்றும்;
சொல்லும் எந்த மனித ஜீவனும் இல்லை.
எல்லோரும் நல்லவரே! எல்லாம் ஆத்மாவே.
மனதின் குற்றக்கற்பனையால் அவ்வாறு தோற்றுகிறது
எல்லாம் பதுமைகள் என்றும்; அப்பதுமைகள்
மண்ணானவைகளே என்றும்; மண்ணாகிய
ப்ரம்மே என்றும்; பரமாகிய நானே என்றும்; திட
என்றும் றது.
உறுதிகொள்வாயாக. மூடஜீவன் இல்லையெனதறிக்க
இது பாவ ஜீவன்! என்றும்
மாத்திரம்.

16. அன்னியமாய்க் காண்பதெல்லாம் பிரம்ம
ஆதலினால் உளது பரப்பிரம்மம் ஒன்றே;
இந்த விதம் இருந்திடினும் உனக்கிப் போதிங்கு
இயம்பியிடும் குருசீடன் உலகமாதி;



பின்னமெனத் தோற்றியிடும் இப்பேதமெல்லாம்;
பிரம்மமென்றும்; அப்பிரம்மம் நாமே என்றும்
உற்ற திடபாவனையால் மனதை வென்று;
மனத்தான பிரம்மமதாய் சாந்தமுறுவாய்.

கருத்து:— உனக்கு அன்னியமாய் காணும்: எதுஎதுகளும்! எவரெவரும்! அந்த காவாதீத பரமே ஆகும். இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்! அனைவும் இப்போது உன் மனத் கண்ணெதிராயும் மற்றும் எதிர் எதிராயும்! யாம் & நீ & உலகம்! ஆக இப்படி பின்னிப் பிணைந்து, பேதாதி பேதமாக! காணும் எல்லாம்; மண்ணாகிய பதுமைகளே! பதுமைகளாகிய மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய யாமே! எனதிட உறுதிகொள்.



(31)

அந்தத் திட உறுதி நிச்சயத்தால் தான்
மனோநாசமும், அதனால் ஜீவன்முக்தியும்,
பெறமுடியுமே யல்லாது, வேறு எந்த
எளிய மார்க்கமும் இல்லையென்பது
ஸத்தியம்.
இம்மனோநாசமாகும் மார்க்கம்.

(17)

நில்லாமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்ற,
நிகில பரிபூரணமாம் பிரம்மரூபம்;
அல்லாமல் ஓரணுவும் எங்கும் இல்லை.
அகிலமுமே அகண்டபரப்பிரம்மமேயாம்.
எல்லாமும் பரப்பிரம்மம் நாமே என்றிங்கு,
எப்போதும் பாவித்து மனதை வென்று,
சொல்லாலும் சொல்லவொண்ணா பரமேயாகி,
சும்மாவே இருந்து மஹாசாந்தியாவாய்.



௩௨

கருத்து :— பார்க்கும் இடம் எங்கும் ஓர் நீக்கமற நிறைவாய் நின்ற பரிபூரணானந்தமே என்ற ஸ்ரீ மஹான்களின் வாக்குப்படி

அதை அறியாமல்; ஏதுவும்! எவரும்! எதுவும்! எங்கும்! இல்லவே இல்லை.

உலகமும் மற்றும் எல்லாமும்! யாமும்! நீயும்!


பரபிரம்மமே எனபாவித்து மனோநாசம் செய்க.

பரிபூரணானந்தம் விளக்கம் இதுவாகும்.

---

(18)

அறிந்த பொருள் அனைத்தையுமே வாக்குமாத்திரம்;
ஆக்காமல் ஆதரவாய் மனதில் கொண்டு;
செறிந்த மனதொருமையுடன் எல்லாம் ஒன்றும்;
சின்மயமாம் பரப்பிரம்மம் அது நாம் என்றே;
நிறைந்த பரபாவனையால் மனதை வென்று;
நிச்சலனாய் எப்போதும் சாந்தனவாய்.
அறிந்ததெல்லாம் ஸத்தியமே ஐயமில்லை.
அகண்ட பரசிவம் ஆணை ஐயமில்லை.




33

கருத்து:-யாம் உரைக்கும் ஸத்தியவாசகம்
அனைத்தும் ஏம் அகண்ட பரசிவத்தின்!
வாக்காகும் அதில் ஐயமில்லை ஸத்தியமாகும்.
ஆகவே இதை வாய் ஞானமாகக்
கொள்ள வேண்டாம். அனுபவ ஞானமாகக்
கொள்வாயாக.
இது வாய் ஞானம் வேண்டாம் அனுபவ ஞானம் வேண்டும் என்பதாகும்.

19


தீங்கான சித்தமுதல் எவையுமில்லை.
திருசியமாய் தெரிகின்ற ஜகமுமில்லை.
அஹங்காரம் முதலிய தோர் அணுவுமில்லை.
அதிலுமே அகண்ட பரப்பிரம்மமேயாம்.
நீங்காமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்று,
நிமல அறிவான பரம் நாம் என்று,
தூங்காது தூங்கும் நிலை கிட்டுமட்டும்,
தொடர்பாக சிந்தித்து ஸாந்தனவாய்.



34


கருத்து :- துன்பம் கொடுக்கின்ற மனம்!
புத்தி! சித்தம்! என்ற குற்றக்கற்பனை!
வடிவம் இல்லை. கண்ணால் காண்கின்ற நாமம்!
ரூப! ஜக! ஜீவ! தோற்றம்! இல்லை.
இவைகளை வைத்து வெறி ஆட்டம் போடுகின்ற
அஹங்காரமும் இல்லை.
எல்லாமே பதுமைகளின் கூட்டம் என்றும்;
அவைகளின் ஆட்டம் என்றும்; மண்மய
பதுமைகள் என்றும்; ப ர அ ம் ஸ ம ண்!
என்றும் நாம் ப ர அ ம் ஸ ம்! என்றும்;
பரத்திற் கண்ணியமாய், எதுவும்! எவரும்!
இல்லை என்றும்; அந்த நிலையில்
தூங்காமல் தூங்கும் ஹரிதுயில் நிலை கிட்டும் மட்டும்
சிந்தித்து சாந்தி ஆவாயாக.
இது தூங்காமல் தூங்கும் ஹரிதுயில் விளக்கமாகும்.

பாடல் ௨0




மனந்தன்னால் செய்ததுவே செய்ததாகும்.
மற்றொன்றல் (தூலத்தால்) செய்ததெல்லாம்
செய்ததாகா.
தினம் தினம் திடமான மனதினாலே,
திருசியமாய் காண்பதெல்லாம் திருக்கேயாம்,
அனந்த பரப்பிரம்ம மென்றும், அதுநானென்றும்,
அகண்டபரபாவனையே செய்வாயானால்,
கனந்தரும் அப்பாவனையால் மனதை வென்று,
கலங்காமல் எப்போதும் ஸாந்தனாவாய்.

கருத்து:- மனதின் வலிய எண்ணமே கர்மாவாகும். அக்கர்மாவின்படி இயங்கும் தூலம் ஓர் கருவி ஆகும். மனமே சூட்சுமம். தூலம் ஜடமாகும். சூட்சுமமனமே ஜனனமரண வித்தாகும். ஆகவே கண்களால் காணும் அனைத்தையும்,




36

மண் புதுமைகளாகவும்! பின் மண்ணாகவும்!
மண்ணாகிய பரமாகவும்! பரமாகிய நாமாகவும்
அ க ண் ட ப ர பா வ னை செய்து
பொல்லாத மனதை வென்று சாந்தி ஆவாய்.
இது அ க ண் ட ப ர பா வ னை யின் அம்சமாகும்.

21

மனதுதான் அவிசாரதசையில் மைந்தா!
மயக்கமுறும் ஜகமுதலாய் தோற்றிடுமே;
மனதுருவை மாறாது விசாரம் செய்தால்,
மனதுதான் மஹத்தான ஸித்தேயாகும்.
மனதனை எளிதாக ஜெயித்தெப்போதும்;
மஹத்தான ஸித்துருவே ஆகவேண்டி,
மனது முதல் எல்லாம் ஸித் அது நாமென்றே,
மாறாது சிந்தித்து சாந்தனாவாய்.



37

கருத்து:— மனோ விசாரணை:— மனதை நீ யார் என்று நான் மாயாவின் மகன் என்பான். மாயாவை நீ யார் என கேட்டால் யாம் ஸ்ரீ பகவானின் ஆயுதம் என்பாள். (ஸ்ரீ நாராயணி ஸ்ரீ பகவானுடைய நிழலாகும்)

உன் தொழில் என்ன என மாயாவை கேட்டால் எம் தொழில் பிண்ட சிருஷ்டி என்பாள்.

(ஸ்ரீ பகவானை கேட்க நியாயமில்லை, அவன் இல்லாதவன்)

நீ எதை வைத்து பிண்ட சிருஷ்டியை செய்கிறாய்?

மாயா:— அண்ட சிருஷ்டியிலிருந்து பிண்ட சிருஷ்டியை செய்கிறோம்.

கேள்வி:— அண்டமோ? பிண்டமோ? அவை எதனாலானது?

மாயா:— எல்லாம் மண்மயமே.


கேள்வி:— மண்மயமென்றால் அதை விளங்கச் சொல்?

மாயா:— அது காலாதீத பரசொரூப அம்சம் ஆகும்.

கேள்வி:— இப்பிண்ட சிருஷ்டியை விகாரப்படுத்தி பின் விவகாரப்படுத்தியது யார்? நீயா?

மாயா:— இல்லை எம் மகன் மனம் தான் அவ்வாறு செய்தான்.

கேள்வி:— ஏ மனமே! இவ்விகாரமும்! விவகாரமும்! எப்படி உண்டு பண்ணினாய்?





மனம் :- ஆசை தேவை / தேவை ஆசை / என்ற நிலையில் நாம ரூப விகாரமும் / நான் / எனதின் விவகாரமும் / பிரச்சனைகளும் எனக்கு நானே உண்டு பண்ணிக் கொண்டேன்.

கேள்வி :- இந்த விகாரமும் / விவஹாரமும் / முழுமையாக நாசமாக என்ன செய்ய வேண்டும்? மாயா குறுக்கிட்டு

மாயா :- இக்கேள்விக்கு எம் மகன் மனம் பதில் சொல்ல முடியாது. பதில் சொல்ல இயலாது. யாம் நான் சொல்ல வேண்டும். சொல்ல முடியும்.

(A) விகாரம் நாசமடைய :- தேவை ஆசை குறைந்து இருப்பதிலும் / கிடைப்பதிலும் / நடப்பதிலும் / இது போதும் என்ற நிறைவு / வேண்டும்.

(B) விவஹாரம் நாசமடைய :- ஓர் நாமரூப ஸ்ரீபகவானிடம் சர்வார்ப்பணம் / செய்தால் போதும்.

கேள்வி :- உன் மகன் மனம் நாசமாக வேண்டுமே / அதன் வழி என்ன?

மாயா :- சர்வார்ப்பணமே ஒன்றுவேயே எம் மகன் இருப்பும் இயக்கமும் அழிய நாசமாக என மாயா முடித்து மனமும் முடிந்தது.

பாடல் ௨௧




39

இப்படி விசாரணை செய்தால். மனோமய
க்கத்தின் நாமரூப, ஜக ஜீவ, தோற்றம்
சர்வ நாசமாகும். மனோவிசாரம் செய்யாத,
தன்மையினால், ஜக மயக்கம் தோற்றுகிறது.
சித்தமாக மாறி
பரமே (ஸத்தே) ஸித்தானது. ஸித்தே (சித்தமே)
மனமுதவாம், ஜகம் ஆனது. எல்லாம் பதுமைகளே.
அப்பதுமைகள் மண்ணுவானதே. மண்ணுகிய பரமே, பரமாகிய
இது மனோ விசாரணை. நாமே என உறுதி செய்.

௨௨

மனதென்றும், வாக்கென்றும், மற்றதென்றும்,
மருவிய இப்பேதமுமே எமக்கிங்கில்லை.
கனவிலுறும் பொருள்களில் எப்பொருள்களோடும்
காண்கின்ற தமக்கயலாய் கண்டதுண்டோ?
நனவிலுறும் பொருள்களும் அவ்விதமேயாக,
நாடியிடும் ஞானவடிவான நாமே.
எனும் உரமாம் பாவனையால் மனதை வென்று,
ஏகபர வடிவாகி ஸாந்தனவாய்.



40

கருத்து:- எண்ணம்! சொல்! செயல்கள்!

ஆகிய வைகளின் மூலமாக விளங்கும் துவங்கும்;

அந்த நாமரூப ஜகம்! இம் ம ன தி னை ல்,

நனவில் நாடி செல்வதனைக் கிடைப்பதைப் போல் தோற்று கிறது.

கனவில் தேடி வருவதைப் போல் " " .


இ ர ண் டு ம் எ ம் ம னை வ டி வ மே உண்மையில்.

அவை எல்லாம் மண் பதுமைகளே! ஆகவே

எல்லாம் மண்ணாகிய மரமே! மரமாகிய யானையே எனை உறுதிகொள்.

(23) இது ந ன வு! க ன வு! காட்சியே! வெறும் பேயே!

மனேஜயமே திடமாகக் கிட்டுமட்டும்;
மற்றுள்ள வியாபாரம் அனைத்தும் விட்டு;
வினைதமதாய் யாவும் ஸித்அது நாமென்றே
விருப்பமுடன் விடாது மிகச்சிந்தை செய்தால்;
மனேஜயமாய் மறந்தான அறிவு உதிக்கும்.
மற்றதனை ஜகம் முதலாம் இருள் இறக்கும்.
இனைதயமே ஆகியபின் இருள்ளங்கே னும்
இருப்பதனை யாரேனும் கண்டதுண்டோ?



41

கருத்து :- ம னோ ஐ ய ம் (மனோநாசம்)

ச க ஜ அ நு ப வ நி லை கிடைக்கும் வரை!

ம னோ வி யா பா ர த் தை வி டு வா யா க.

மனோவியாபாரம் (A) :- தேவை ஆசைகளின் பிரவர்த்தி!

(B) நான் எனதின்/அஹங்கார அதிகார ஆதிக்க!

அபிமான/வைராக்யாட்டம். (C) மூர்க்கவன சக்தி!

(D) தற்காப்பு சக்தி முதலிய நான்கின் நிலையை

மாற்றி; மாறுக :- (மனோநாசம்) (A) போதும் என்ற நிறைவு


(B) சர்வார்ப்பணம்! (C) தற்கவன சக்தி (D) பொறுமை

பணிவு! கருணை! இனிமை! எளிமை! ஆகிய இவை

ஐந்தையும் ஏற்றால் மனோவியாபாரம் நாசமாகும்.

மேலே சொன்ன ஸத்திய வாக்குப்படி நடந்தால்


அறிவு பிரகாசிக்கும். பேரறிவு ஒளிதாகும்.



ஆனந்த ஞான ஒளி இயல்பாக பிரகாசிக்கும்
அஞ்ஞான இருள் அச்சுஷணமே மறையும்.
இது மனோ ஜயம் பெறும் மார்க்கம்.

**24**

ஆதலினால் அமலமான மனதினாலே,
அனவரதம் பரப்பிரம்ம விசாரம் செய்து,
போதகன பரப்பிரம்மம் தானே எல்லாம்,
பூரணமாம் பரப்பிரம்மம் அது நாம் என்று,
சாதகமாம் பாவனையே திடமாய் செய்து;
சஞ்சலமாய் உளமனதை நன்றாய் வென்று
ஜோதிமிகும் பரப்பிரம்மம் தாமேயாகி;
சும்மாவே இருந்து மஹாசாந்தியாவாய்.




கருத்து:— எல்லாம் பதுமைகளே! அவைகள் எல்லாம் மண்ணே! மண்ணுக்கன்றியமாய், எவரும்! எதுவும்! இல்லவே இவ்வே. மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என்ற பிரம்மான்மபாவனையை சிந்தை தைலதாரை போல், இடையறுது செய்து வந்தால், மனமும் & அறிவும்! இறக்கும். பேரறிவு பிரகாசிக்கும். அகண்டானந்த பேரொளியாய்! பிரகாசித்து சும்மாவே சுகமாகவே இருக்கலாம்.

இது இடையறுத ஞானப்பியாசம் உரைக்கிறது.

**25**


அனாத அறிவான பரப்பிரம்மம் தானே,
அவித்தையினால் அசைவுறுமேல்
மனதாய் தோற்றும்.



௪௪

வினவும் அறிவான பரப்பிரம்மம் தானே;
விந்தையினால் அசைவறுவதால் பரமேயாகும்.
மனத்துவும் சலனமுடன் இருக்குமாகில்;
மகத்தான ஜீவ பர ஜகமாய் தோன்றும்.
மனத்துவே சலனமில்லா திருக்குமாகில்;
மாசற்ற அறிவான பரமே யாகும்.

கருத்து :— காலாதீத பரமானது/ அதன் நிழலான மாயாவினால்/ அசைவதைப் போல் தோற்றிடுமால்; நாமரூப ஜகஜீவாதிகளும்; இருப்பதைப் போல் தோற்றும். (ஜலம் அசைவதினால் அதில் தோன்றும் சந்திரன் அசைவது போல்) அதைப் போல மனம் அசைந்தால் நாமரூப ஜகஜீவாதிகள்/ தோஷ குண சொரூபந்தால் இயங்குவதைப் போல் தோற்றும். மனம் அசையாதிருந்தால் சிற்ப சித்திர/ காட்சியாகவும். பின் மண்ணாகிய பரமாகவும்/ பரமாகிய நாமாகவும்/ உறைவாம். (தோணையுடியாது) இது மனம் அசைந்தால் ஜகம்/ அசையவில்லையானால் பரம் என உணர்த்துகிறது.



45


26

தனுமன முயற்சியிலேல் பிரம்மாப்யாசம்;
தவிராது செய்துமனோஜயம் பெற்றோர்க்கே;
அனைய பர உணர்வு எளிதாய் உதிக்குமன்றி;
அன்னியர்க்கு எளிதாக உதியாதென்றும்;
சொன்ன உணர்வு சுகம்நல்கும் துயரைத்தீர்க்கும்.
சுபத்திற்கும் சுபமாக்கும் (அதி) சுலபமாகும்.
ஜனனமுதல் விகாரமெல்லாம் தவிர்த்த தன்னை;
ஸத்திய ஸித் சுகதனமாம் பரமேயாக்கும்.

கருத்து:- லௌகீகத்திற்கு தனுமனமுயற்சி வேண்டாம். (அது திட்டமிட்டு முடிக்கப்பட்டதோர் தர்மகாரியமாகும்.) ஆ... ஹா... ஸீ? தெய்வீகத்திற்கும் & பரமார்த்தீகத்திற்கும்! முறையே, மன முயற்சியும் / அறிவின் முயற்சியும்! அவஸ்யம் வேண்டும்.

(A) மன முயற்சி! சர்வார்ப்பணம்.

(B) அறிவின் முயற்சி! பிரம்மார்ப்பணம்.




46

மனம்
(A) சர்வார்ப்பணத்தால் மனதை பக்குவம்.
அறிவு
(B) பிரம்மார்ப்பணத்தால் மனதை நாசமும்
அறிவு & பேரறிவின் ஐக்கியமும் ஆகும்.

இவ்விரண்டும் முறையாக ஓர் சாதனையாளன்!
செய்யவில்லையாயின் அவன் எப்படி இருப்பான் என்றால்?
பக்தனைப் போலும்! ஞானியைப் போலும்!!
இருப்பானேயன்றி, பக்தனுமாகான்! ஞானியுமாகான்!

என ஆதி ஸ்ரீ மஹான்களின் வாக்கால் அறிகிறோம்.
இவ்விரண்டும் செய்யாதவரனையோர்க்கு ஜீவன்முக்தி!
எளிதில் கிட்டாது. முறையாக செய்பவருக்கு,
ஜீவன்முக்தியின் சாதனை சுபமாகவும்! அதிஅதி
சுலபமாகவும்! சுவத்திறமும் சுபமாகவும்! கிட்டும்.
புண்ணியபாவம் நசிக்கும். ஸத்திய தர்மம் நசிக்கும்.
ஜீவன்முக்தி சித்திக்கும்.
இது தனது மன முயற்சியின் விளக்கமாகும்.





கனவினிடை திருசியமாய் காணப்பட்ட;
கடபடமே முதலியவும் மித்தையே போல்;
நனவினிடை திருசியமாய் நாடப்பட்ட;
நாநாவாம் ஜக! ஜீவ! பரமும்! மித்தை.
அனையதெல்லாம் அறிகின்ற திருக்கேயான;
ஆன்மாவுக்கு அபின்னமதாம் பிரம்மம் ஒன்றே;
அனவரதம் அழியாத உண்மை வஸ்து.
அறைந்ததிலேோர் அணுவேனும் ஐயமில்லை.

<u>கருத்து</u>:- <u>கனவில்</u> <u>நாமரூப</u> <u>பொருள்கள்</u> <u>நம்மை</u> <u>தேடி</u> <u>வருகிறது</u>. <u>நனவில்</u> <u>நாமரூபபொருள்களை</u> <u>நாம் தேடிச்செல்ல வேண்டும்</u>.

ஆனால் இரண்டுமே, <u>தோன்றி</u>! <u>இருந்து</u>! <u>மறைந்து</u> விடுகிறது.

இவை <u>அனைத்துமே</u> <u>ஆன்மாவின்</u> <u>மாயவடிவமாகும்</u>.

<u>ஆன்மாவே</u> <u>அதிஷ்டானம்</u> <u>ஆகும்</u>.



48

அதில் தோன்றிய நாம ரூப! ஜக ஜீவ!

பண்ட! பாண்ட! பதார்த்தம்! அனைத்தும்

ஆ ன் மா வி ன் ஆ ரோ ப ம் ஆகும்.

அதாவது எல்லாம் மண்பாண்டமே! பதுமைகளே!

மண்ணுக்கு அன்னியமாக ஏதுவும்! எவரும்!

இல்லை! இல்லை! இல்லவே இல்லை.

ஆகவே எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய


நாமே! என உறுதிநிச்சயம் செய்.

இது நனவு! கனவு! இவற்றின் உண்மை இன்மை.

38

வருத்தம் இல்லாது இருக்கையிலும் வருத்தம் போல,
வழுவுற்ற மாபாவி மனதில் தோன்றும்.
விருத்தமதாம் பாவமெல்லாம் வீந்து மெத்த,
விமலமதாம் மனதுடையோர்க்கு இவ்வப்பியாசம்,
கருத்திலுற மிக எளிதாம். ஆகவாவே,
கலங்காமல் எப்போதும் ஞானப்பியாசம்,
திருத்தமுறச் செய்வோர்க்கு தேவதேவன்!
திருஅருளால் திடஞானம் திகழுமன்றே.

பாடல் ௨௮




49

கருத்து :- இந்த பிரம்மாண்ட பாவனையின்!
அப்பியாசம் செய்ய எந்த வருத்தமோ!
கஷ்டமோ! கவலையோ! இல்லை.

ஆ ஹ லீ?

முதலில் ச ர் வா ர் ப் ப ண ம் முறையாக
செய்து, ஸ்ரீபகவானின் கிருபையை பெறுதவருக்கு
கர்மாவில் சிக்கிய மஹாபாபிமனமாகி விடுகிறது
இது கலியுகத்தின் கடைசி (அழிவு) காலம்!
என்பதை அனைவரும் மறந்து விட்டனர். அதனை
மறுத்தும் வருகின்றனர். இது அவர்கள் குறையில்லை.
கலியின் மஹிமையாகும். சர்வார்ப்பணமும்! பின்
பிரம்மார்ப்பணமும்! செய்பவர்க்கே இது எளிதாய்
முடியும்.
ஸ்ரீபகவான் கிருபை பெருமல், ஆத்ம ஞானம் இல்லை.
இதில் கர்மம் ஆனதை சுட்டிக்காட்டுகிறது.


50



29

கல்லாத கல்வியெல்லாம் கற்றபோதும்,
கலக்கமில்லாப் பரப்பிரம்ம ஞானம் ஒன்றை,
அல்லாது பவப்பீதி விடுக்க வொண்ணா.
ஆதலினால் ஆதரவாய் நீஎப்போதும்,
எல்லாமே பிரம்மமென்றும், அதுநாமென்றும்
ஏகமதாம் பரப்பிரம்ம ஞானம் பெற்று,
பொல்லாத பவப்பீதி அனைத்தும் போக்கி,
பூரணமாயுள்ள பரம்பொருளே யாவாய்.

கருத்து:- பாடம்/படிப்பு/பட்டம்/பதவி/
அதனால் பெறும் பணம்! போட்டி/பொறாமை!
வேண்டவே வேண்டாம்.
பொறுமை/பணிவு/அன்பு/கருணை/கனிவு/
குற்றம் குறை காணாமை! இறை/குரு உணர்வு!
அதில் நம்பிக்கையின் வைராக்கியம்!
மோட்ச இச்சை/இவைகளின்
உள் ஆழ்ந்த கல்வி! வேண்டும்.




51

மேலேகூறிய கல்வியினால் நான், எனது, என்ற
அஹங்கார, மமஹாரமும், ஆதிக்க, அதிகார
வெறியினால் தோன்றும், மூர்க்கமான சக்தியும்,
வெட்கம், மானம், சூடு, சுரணை, வஞ்சனை, கூச்சம்,
முதலிய தூல அபிமான குணங்களும், ஜீவ
கர்த்தத்துவத்தோடு, சர்வநாசமாகியதனால்
ஜீவன் முக்தி வழி தாமே திறக்கிறது, என உணர்க.
அந்நிலையில் எல்லாம் புதுமைகளே என்றும், அவைகள்
மண்மயமே, என்றும், மண்ணாகிய பரமே, பரமாகி
நாமே, என்ற பிரம்மான்ம பாவனை, எளிதாகும்.
இது ஜீவ பாடம் வேண்டாம், ஆன்ம கல்வி வேண்டும்
30 என்பதை வலியுறுத்துகிறது.

———×———×———×———×———×———

கறையற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை.
(நீ) காண்பதுவும், கேட்பதுவும், எவையும் இல்லை.
நிறைவுற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை.
(நீ) நினைப்பதுவும், நினையாதும், எவையும் இல்லை.





மறைவற்ற பரப்பிரம்மம் ஒன்றே உண்மை.
(இகு) மற்றதெல்லாம் ஒருகாலும் இலவே இல்லை.
குறைவற்ற பரப்பிரம்மம் நாமே என்று.
கோருறவே எப்போதும் தியானம் செய்வாய்.

கருத்து :— கங்கு கறையற்ற (எல்லையற்ற), அகண்டமான, ஈடு இணையற்ற, மஹா பெரிதுக்கும் பெரியதான, அகண்ட பேரொளியான, பிரம்மம் ஒன்றே உண்மை. (ஸத்தியம்)


நீ உன் மனக்கண்ணாலும், காதுகளாலும், காணும் நாமரூபங்களான எவரும், எதுவும், இல்லவே இல்லை.

கர்மா, பக்தி, யோகம், ஞானம், கிளைகளா விளக்கும் (கேட்கும்) எந்த ஒலிகளும் (ஓசைகளும்) இலவே இல்லை.

பரிபூரண நிறைவுக்கும் நிறைவான (ஹீனக்க முடியாததான) பிரம்மம் ஒன்றே உண்மை. (ஸத்தியம்)

மனதால் எண்ணும் கற்பனையும், அகன் வாக்கும் ஒலியும்,

பாடல் 30




53

அறிவால்! விளக்கும் தெய்வீக! பரமார்த்திக! ஒலியும்
வாக்கும்! வரியும்! இவையே இல்லை.
மனத் திரையோ! மாயாவின் திரையோ! மறைக்காத
மறைக்க முடியாத, மறைக்க இயலாத பிரம்மம்
ஒன்றே உண்மை. ஸத்தியம்.
மற்றும் ஜக, ஜீவ, தேவ, ஈச! விளக்கம் &
விமர்சனம் சூட்சும நாம ரூப அம்சங்கள்
எவையும்! எவரும்! இவையே இல்லை.
குறையாத பரிபூரணமானது! பிரம்மம்!
அதுவே நாம்! நாமே அது! எனை சும்மா சுகமாயிரு.

31 அது பரிபூரணாநந்த விளக்கமாகும்.

ஜகமுதலாய் எண்ணுவதை தூரத் தள்ளி,
சகலமுமே பிரம்மமென தியானம் செய்வாய்.
அகம் உடல் என்றெண்ணுவதை தூரத் தள்ளி,
அகம் பிரம்மம் என்றனிசம் தியானம் செய்வாய்.



54

சகலமுமே பிரம்மமென்றும் அது நாம் என்றும்,
சந்ததமும் சலியாது தியானம் செய்தால்,
அகம் அன்னியம், ஜகம் முதலியது அன்னியம் என்னும்
அயலெல்லாம் அனுதினமும் அடைவாய் தீரும்.

கருத்து:— நாம ரூப / ஜக / ஜீவ / தோற்றங்களை / நான் / எனது / என்று பாவனை செய்யாதே.
உன் உடலையும் / உடைமைகளையும் / நான் / எனது / என்று பாவனை செய்யாதே.
எல்லாம் பதுமைகள் என்னும் பொம்மலாட்டம் / என்றும், எல்லா பதுமைகளும் மண்மயமே என்றும்,
மண்ணாகிய பரமே / பரமாகிய நாமே / நாமாகிய பரமே / என இடையறாது
தாரைபோல் தியானம் செய்வாயாக, த்வைத அகலப்பரிபூரண பிரம்மமயமானவாய்.
ஜீவன் முக்தியும் அடைவாய் இது ஸத்தியம்.
அதுவே நாம் / நாமே அது / என்னும் தியான முறையை / போதிக்கிறது.


—x—x—x—x—x—x—x—

55




அலைமனத்தின் ஓர்மை இல்லாத் தன்மையாலே,
அகம் பிரம்ம பாவனையே செய்ய சக்தி,
இலதேனும்; எப்போதும் சிரத்தையோடு,
"யாம்பிரம்மம், யாம்பிரம்மம், யாமே எல்லாம்,
சலனமில்லா பரமே நாம்; பரம் நாம் என்னும்
நிசப்தத்தை உரைத்தாலும் இவ்வறத்தால்,
நிலைமருவாது அலைமனது மெள்ள மெள்ள,
நிச்சலமாய் நிகழ்த்திய பாவனையில் நிற்கும்.

கருத்து :— இப்பாடல் / கலியுகம் ஆரம்பம் ஆகும் முன்னும் ! கலியுகம் முற்பாதிவரையிலும் ! பூர்வசுகிர்தம் தர்மம் மேலோங்கி அநுபவம் பெற்றவர்களுக்கும் மட்டும் பொருந்தும். ஏனையோருக்குப் பொருந்ாது. ஆ ஞ யு ம்? ஸத்குருகிருபையை! முழுமையாக





பெற்றவர்களுக்கும் | பொருந்தும் எனை ஆதிஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

காரணம்:- இப்பாடலில், ஸ்ரீ பகவானுக்கும் | அவனுடைய சர்வார்ப்பணத்திற்கும் | இடமும் | முக்கியத்துவமும் | கொடுக்கவில்லை. இந்த யுகத்தில் | இந்த ருணத்தில் | மேலே சொன்ன இரண்டும் தேவைபடுகிறது.

காரணம்:- மனம் & கலி | இணைந்த நிலையில் விளம்பரம் | வியாபாரம் | ஆடம்பரம் | இவைகளின் ஆர்ப்பாட்டம் | அதிகாரம் | ஆதிக்கம் | அஹங்காரம் | நிறைந்து, வக்ரகுணம் மேலோங்கி இருப்பதால் மலினமனம் உடையவர்களுக்கு மட்டும் பொருந்தாத எனை உரைவும்.

பாடல் 32



57


அவர்கள் சரீவார்ப்பணத்தோடு
கூடிய ஸ்வய அனுபவம்! பெற்றுவிடு
அவஸ்யம் ஜீவன் முக்தி! அடைவார்கள் என கூறு
இனிபாடலுக்கு விளக்கம் தருகிறோம்.
மனம் என்றுவே, சலனம்! சஞ்சலம்!
சந்தேகபயதுக்க கலக்கம் உண்டு (இக்கவியில் மட்டும்)
அசைந்தால் மனம்! அசைவற்றால் அறிவு!
அப்படி சலிப்படைகின்ற மனம் ஓர்மை
அடையவில்லையானால்; அகம் பிரம்மம்!
பிரம்மம் அகம்! அகமே எல்லாம்!
என்னும் அகண்ட பரபாவனையை! இடையறுது,
தைலதாரைபோல் ஸ்மரணை செய்துவந்தால்.
பரகருணையால்! மனம்! மாயாவசமாகும்.
மாயா! பரத்தில்! கரைந்து கலந்து மயமாகிவிடும்.
ஆனால் இந்த ஸ்மரணை நீர்த்தாரை போல் இருக்கவாகாது
இந்த ஸ்மரணை தைலதாரை போல் இருக்கவேண்டும்.
அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்! அகமே எல்லாம்! என உணர்த்துகிறது.



33

நிரந்தரமாய் பாவனையில் மனது நின்றால் (உண்டாகும்)
நிச்சலமாய் அகண்டபர ஞானம் உண்டாய்;
திரிந்தலையும் மனதினுடைய விகல்பமாக,
தெரிகின்ற பேதமெல்லாம் உடனே தீரும்.
தெரிந்திடும் இப் பேதமெல்லாம் தீருமட்டும்;
திருசியமாய் தெரிவதெல்லாம் பரமேயென்றும்
பொருந்திய அப்பரப்பிரம்மம் நாமே என்றும்;
பூரணமாய் எப்போதும் தியானம் செய்வாய்.

கருத்து:— அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்! அகமே எல்லாம்! நாம் அது! அதுவே நாம்! எல்லாம் அதுவே! நாமே எல்லாம் என்ற பிரம்மாண்ம பாவனையில் மனம் நிலைபெற்று நின்று, மனம் அறிவாகிவிட்டால்; நாம ரூப! ஜக ஜீவ! பேதம் அனைத்தும், சர்வநாசமாகும். இப்பேதம் சர்வநாசம் ஆகும்வரை இடையறாது,




59

தைலதாரை போல் பாவனை செய்ய வேண்டும்.

அங்கு மெய்யுணர்வு எப்படி இருக்க வேண்டு மெனில்:- எல்லாம் புதுமைகளே! எல்லாம் பொம்மலாட்டமே! புதுமைகள் அனைத்தும் உண்மையமே! மண்மயமே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என சிந்தித்து சிந்தித்து அதுவாய், தைலதாரை போல் சிந்தித்து மனோநாசம் ஆக வேண்டும்.

34

நிறைவுறும் இந்நிஷ்டையுள்ளோர் நீசரேனும்,
நிர்மலமாம் பரமாகி முக்தராவர்.
அறைவதில் வேறோர் அணுவேனும் ஐயமில்லை.
உறுதியிதே. ஆதலினால் முழுச்செல்வமாம்,
குறைவறவே இந்நிஷ்டை கூடுமட்டும்,
கூறுபடும் பேதமெல்லாம் பிரம்மமென்றும்,
அறிவுருவாம்! அப்பிரம்மம் நாமே என்றும்,
அகண்ட பர பாவனையே பழகல் வேண்டும்.





கருத்து — குறிப்பு :— நீசன் என்றும்; மஹாபாவி என்றும்; முழுமூடன் என்றும்; மிக மிக மிக தாழ்ச்சியாக கூறப்படுவதெல்லாம்; குணமயமே! அது மனசம்பந்தம் ஆகும். அம்மனமோ மாயாவின் மகன்! மாயாவோ ஸ்ரீபகவானின்! கைக்குருவி! ஆகும். இதன் ஜீவம்! ஸ்ரீபகவானாகும்! மாயாவை! தொடாத நிலையில் ஸ்ரீபகவான்! பரிபூரண சைத்தன்யமே ஆத்மாவும் பரமாத்மாவும் ஆவான். நீயும்! அவன் அம்சமே! இது ஸத்தியம். நாம ரூப! ஜக ஜீவ! விளையாட்டுக்கள் அனைத்தும். மாயா! மனம்! குணம்! வினை! விதி! ஆகியவை சம்பந்தமே தவிர, வேறு ஒரு புண்ணாக்கும் இல்லை.

61



உன் முழுமையான நம்பிக்கையின்!
ச ர் வா ர் ப் ப ண த் தா லே!
நீ! அ வ ன்! கை பீ! ப து மை! என ஆகி விடாமல்
முடிந்த வி னை க ளை க் கு! க ளை வா கு ம்.
வரும் ,, த டு க் க ப் ப டு ம்.
எப்படி என்றால்?
கொன்றனை உன்னை சேர்ந்ததை கொல்லும்.
தின்றனை ,, ,, தின்னும்.
நீ பாதுகாத்தது ,, ,, பாதுகாக்கும்.
இம் மூன்றும் நீ யு ம் அல்ல. உ ன து ம் அல்ல.
தன்வினை முடிவுறும்! தொடர்வுறாது!!
இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்!
இப் பாடலின் கருத்து :- அகம் பிரம்மம்!
பிரம்மம் அகம்! அகமே எல்லாம்! எல்லாம்
அகமே! (எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது!)
என்ற அகண்டாகார பரபாவனை! செய்பவர்


62



ஏவராயினும்! சந்தேகம்!
கலக்கம்! பயம்! வேண்டாம். ஆனால்?
உள்ளத்தில் உறுதி நிச்சயம் வழுவாமல்
ஸ்திரமாக இருக்க வேண்டும். அவர் நிச்சயமாக
ஜீவன்முக்தி! பெறுவர் இது ஸத்தியம்.
பாபிகளுக்கும் நீசர்களுக்கும் கருணை காட்டவேண்டாம்.

35

மாயை இல்லை. மருவும் அஹங்காரம் இல்லை.
மனமும் இல்லை. புத்தி இல்லை. சித்தம் இல்லை.
காயம் இல்லை. கருமம் இல்லை. கர்த்தா இல்லை.
காண்கின்ற பொறிகள் இல்லை. புலன்கள் இல்லை.
ஆய பல உயிர்கள் இல்லை. அமரர் இல்லை.
ஹயனும் இல்லை. ஹரியும் இல்லை. ஹரனும் இல்லை.
ஞேய பொருள் எவையும் இல்லை எல்லாம் ஒன்றும்,
ஏகபரிபூரணமாம் பிரம்மரூபம்.




௬

கருத்து:— மாயாவும்! அதன்மகனாமனமும்!
அதன் இயக்க குணமான, அஹங்காரமும்! அதன்
கிளைகளான, புத்தி சித்தமும்! இவைகளால்
விளைந்த கர்மாவும், அதன் உருவமான காயமும் (உடலும்)
அதன் இயக்க குணமான கர்த்ருத்வமும் கர்த்தாவும்!
அக்கர்த்தாவால் இயங்குகின்ற, பொறிகளும், புலன்களும்!
மற்றும் 84 லக்ஷம்! ஜீவ கோடிகளும்!
சூட்சுமவடிவங்களான 33 கோடி தேவகணங்களும்!
இவைகள் ஒட்டுமொத்தமாக, நாம ரூப! பாவங்களும்!
நாம ரூப சூட்சுமங்களும்! ரூப நாம அதி சூட்சுமமான!
ஸ்ரீ ஹயன்! ஸ்ரீ ஹரி! ஸ்ரீ ஹரன்! ஆகிய
தோற்றம்! இருப்பு! மட்டுமே உடையவைகளாம்.



எந்த நாமரூபங்கள்களும்
இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!
ஆ.............ஹ.............ஹ்???

வாக்கிய விளக்கத்திற்காகவும்!
மனதுடையவர்களின்!
நம்பிக்கைக்காகவும்!
இவை ஆதி ஸ்ரீ மஹான்களின்! வாக்காக!
கிரஹித்து சொல்கிறோம்! வரைகிறோம்!!
பிரம்ம பிரணவாஹார!
ஒளியாக விளங்குகிறது! ஒலியாக விளங்குகிறது!
ஆனால்? அது அதுவாக! தான் தானாக! தனித்து! சுதா
னந்தமாய்! சும்மா சுகமாய் இருக்கிறது.



(65)

அனைத்தும் சொல்வாரும் இல்லை.

ஏற்றுக் கொள்வாரும் இல்லை.

(குருவும்! அவர் அன்பர்களும்!)

நாம் நாமாகவே இருக்கிறோம்

வாக்கியவிளக்கமாக சொல்வதென்றால்?

இருக்கிறார்கள்

ஸ்ரீஹயன்! ஸ்ரீஹரி! ஸ்ரீஹரன்! ஸத்குருவாக!

என உபசாரவசனமாக சொல்லலாம்.

ஸ்ரீஹயன்! ஸ்ரீஹரி! ஸ்ரீஹரன்! தெய்வநாமரூபமாக இல்லையென்றும் ஸத்குருவாக உள்ளாரென்றும் உரைக்கிறது.

(36) —×—×—×—×—×—×—×—×—

அன்னியமே தோன்றாத அகண்டாகாரம்;

அறிவுதனை அடைந்தவனே முக்தனாவான்.

இந்தவிதம் அகண்டபர ஞானமுற்றோன்;


இவ்வுலகில் எவ்விடத்தும் அரியவனவன்.

(அவன்) சொல்லவொண்ணா பலகோடி ஜீவருக்குள்;

உத்தமான ஞானமுள்ளோன் ஒருவன்தானே.

அன்னவனை தரிசித்த மாத்திரத்தில்;

அறமேவாம். அறமெல்லாம் அழியுமன்றோ.






கருத்து:— ஜீவன்முக்தியின்! ரகஸ்யமான
பிரம்மஞானம்! ஸ்வய அனுபவம்
பெற்று; அதுவாகவே இருப்பவர்கள்!
இக்கலியில் மிகக் குறைவு. ஆகவேதான் திரி
லோகத்தில் ஒரு ஞானி என்றார்கள்;
அனுபவ ஸ்ரீமஹான்கள். அவன் தரிஸனம்
கிடைப்பது வெகுதுர்லபம்.

(A) பூர்வ சுகிர்தம் பெற்றவருக்கு கிடைக்கும்.
(B) பக்தி கலந்த ஞானானுபவம் உள்ளவனுக்கு ,, .
(C) உருக்கம்! ஏக்கம்! கண்ணீர்
பெருக்கம்! இதயத் துடிப்பு! ,, ,, .
(D) காமம்/காஞ்சனம்/ஆசையை கெடுத்தவனுக்கு; ,, .
(E) விளம்பரம்/ வியாபாரம்/ ஆடம்பரம்
முழுமையாக கெடுத்தவனுக்கு; ,, .
(F) மூர்க்கனமும்/ தற்காப்பும்!
முழுமையாக நாசமானவனுக்கு; ,, .

## பாடல் 36




67

அப்படி கிடைத்தவனுக்கு மறைபொருளாக!
அறம் மேலோங்கும்.
அறம் சர்வநாசமாகும்.
இது ஞானியின் பெருமையை கூறுகிறது.

37

பேசிய இந்நிச்சயமும் சமாதி விட்டு,
பிரிவுற்ற காலத்தில் உள்ளதன்றி,
பாசமில்லா சமாதிதனில் இருக்கும் காலே,
பரவிய இந்த நிச்சயமும் அறிஞர்க்கில்லை,
சாசுவத சமாதிதனில் சலனமற்று,
சங்கல்ப விகல்பங்கள் அனைத்தும் அற்று,
ஆகில் (வர்) பரம ஆனந்த அனுபவத்தோடு,
ஆவரணமின்றி அசஞ்சலமாய் நிற்பன்.

கருத்து :- இருதிட ஞானியானவன் அனுபவம் எப்படி இருக்கும் என்றால்? அவனிடம் நிஷ்டாசாதனம் இனியே இராது.



68


ஸாஸ்வதமாகவே பயிற்சி & முயற்சி தேடுவே
இல்லாமல், இயல்பாகவே பேதம்! விருப்பு!
வெறுப்பு! குற்றம் கற்பனையற்ற! சமாதியில்
நாம ரூப! ஆவரணம்! மயக்கமின்றி;
சர்வானந்த பரனாகவே இருப்பான்.
இது ஞானியின் இருப்பு நிலையாகும்.

---

38

சலனமில்லா சிலை போலும்; காஷ்டம் போலும்;
சங்கல்ப விகல்பங்கள் ஒன்றுமின்றி;
சலனமுறுப் பிரம்மத்தில் பாலும் நீரும்;
கலப்பது போல் வேறறவே கலந்து சுற்றும்;
அவ்வாறவே வெறிதாக சுகித்திருக்கும்;
அறிஞனுடைய அந்நிஷ்டை மஹிமை தன்னை;
நிலைமருவா மனத்தாலும்; வசனத்தாலும்;
நினைத்திடவும் பகர்ந்திடவும் யார்தான் வல்லோர்?

கருத்து:— முன்பு கூறிய திட ஞானியானவன்!
உணர்ச்சியற்ற நிலையில்;



69

உணர்வும் அடங்கி/ ஒடுங்கிய/
நிலையில்; பட்டமரக்கட்டை போலும்;
(சுமைதாங்கி) கருங்கல்லைப் போலும்;
இருப்பு நிலையில் இருப்பான்.
இயக்க நிலையில் பாலும்! நீரும்/ கலந்திருப்பது போல்

(குறிப்பு:- ஐவந்தை வெளியில் காட்டாமல்
தம்முள் ஐக்கியபடுத்தும் பால் போன்று)

நாமரூப ஜக ஜீவ தோற்ற நாமரூபம்/
அனைத்தையும் மண்பதுமைகளாகவும்/ அவைகள்
மண்ணுக்கு அன்னியமில்லையென்ற நிலையில்.
மண்ணாகிய பரமே/ பரமாகிய யாமே/ யாமாகிய
பரமேன/ சொல்லும்/ பொருளும்/
தம்முள் அடங்கிய நிலையில் ஆனந்த பரதை
இருப்பான்.



70

அவன் பெருமையை, ஆயிரம் சிரம் கொண்ட ஆதிசேஷனும், திரிகர்த்தாக்களும் சொல்லவோ, விளக்கவோ, முடியாது. இதுவும் ஞானியின் பெருமையை உணர்த்துகிறது.

---

39

பலகால வாதனையால் துவைதம் தானே,
பரமார்த்தமென்று நினைவு உதித்தபோதும்,
தொலையாத துவைத வடிவாகத்தானே, தோற்றும்
துவைதத்தை நினையாமல் அவற்றை வெல்லாம்,
அலையாத அதிஷ்டான அறிவாய் நின்று,
அத்வைதம் ஆனபர வடிவேயாகச்,
சலியாமல் எப்போதும் நினைத்தேயத்தால்,
ஸத்திய ஸித்சுக வடிவாய் முக்தனாவாய்.

கருத்து:- பலகால வாதனை என்பதை பல ஜன்மவாசனை எனக்கொள்க. பல ஜன்மவாசனையில் கறைபட்டு, கறைபட்டு, விளக்கவொண்ணாத, விலக்கமுடியாத, தளிம்பு உறிவிட்டது எனகொள்ள வேண்டும்.



71


ஆகவேதான் ஞானானுபவபாடம்! எத்தனை
முறை! எப்படி எப்படி!
பலநிலைகளிலும்! பல உதாரணங்களிலும்! எத்தனை
விளக்கினாலும்! துவைதவாஸனையும்!

ஒழியவில்லை என { சந்தேகத்துவ / தீகபயமும்

ஸத்தியமாய் உணர்க

இப்பயம் நீங்க வேண்டுமானால் அனுபவநிலையில்;
இயக்க நிலையில் ஸ்ரீ பகவான் ஒருவனே
இயக்கமற்ற நிலையில் இருப்பது ஒன்றே!
இவ்விரண்டைத்தவிர, எவரும்! எதுவும்!!
இல்லவே இல்லையென்றும்; அவனும்! அதுவும்! ஒன்றே.
என்றும்; அவ்விரண்டும் இணைந்து கலந்த நிலையில்;
எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது!!
என நன்கு தாரணை போல், சிந்தித்து அனுபவம் கூடினால்
(உன் சலியாத பாவனையால்) நீ ஜீவன் முக்தனாவாய்
இது ஸத்தியம்.
இது துவைதபயம் தொலையும் பாடல்.

72




40

மனததுதான் நின் சகஜ சொரூபமானால்;
மனததுதான் மீளாதுமாண்டுபோகும்.
மனதுடைய மீளாத மாய்வு தானே!
மஹத்தான மோக்ஷ நிலை அதனால் மைந்தா!
மனததனை மீளாது மாய்க்க வேண்டி;
மஹத்தான பரப்பிரம்ம நிச்சயத்தை;
மனதொருமையுடன் செய்து மனதை மாய்த்து;
மஹத்தான முக்தி நிலை மேவி நிற்பாய்.

கருத்து:- மனம் உன் யதார்த்த சொரூபம் ஆக வேண்டும் என்கிறார். அப்படியானால் (மனதுடன்) நம் யதார்த்த சொரூபம்/அறிவின் ஆன்ம சொரூபமாகும்/என உணர்க. அப்படியானால் நம் அறிவின் ஆன்ம சொரூபத்தை! மனே வடிவம் ஆக்கியது யார்? என கேள். இக்கலியுகத்தில்! (மட்டும்) கலிதோஷத்தால் அறிவே மனமாகியது எனத் தெளிவாகும்.


பாடல் ௭0



73

இதற்கு எந்த ஸ்ரீ பகவானும்! எந்த ஸ்ரீ மஹான்களும்!
பொறுப்பல்ல. அறிவே பொறுப்பாகும்.
(அவரவர்)
அதுவும் இக்கலியுகத்தில்! கலி தோஷத்தால்!
அறிவே! மனமாக வேண்டும்!
என்பதே நியதியின் விதியாகும் என உணர்.
இதை மாற்றவோ! மறுக்கவோ! விலக்கவோ! எவராலும் முடியாது.
இதற்கு முறையாக முதலில், சர்வார்ப்பணமும்!
அடுத்து பிரம்மார்ப்பணமும்! செய்தால்
மட்டும் மனம் அறிவாகவும்! அவ்வறிவே
பேரறிவாகவும்! மாறு மார்க்கம் உண்டு.
மனதை மாய்க்க இதுவே மார்க்கமாகும்.
ஆகவே நடந்ததை எண்ணி வருந்த வேண்டாம்.
நடப்பதை இறைகுரு உணர்வோடு நலம் என எண்ண வேண்டும்.
மனதை மாய்க்கும் (மஹத்தாகும்) மார்க்கமாகும்.

74



41

ஆதலினால் அனைத்திற்கும் அதீதமான,
அகண்டபரப்பிரம்மம் அகம் என்றெப்போதும்;
சாதகமாம் பாவனையே செய்துதாவே;
சஞ்சலமாம் விகல்பமெல்லாம் தவிர்த்தெப்போதும்
பேதமில்லா பரப்பிரம்ம ஞானியாகி;
பின்னமில்லா பரப்பிரம்ம வடிவேயாவாய்.
ஐயமில்லால் எளிதாக முக்தி சேர;
வேறொன்றும் உபாயமில்லை அதுவே உண்மை.

கருத்து :— முன்பாடலில் கூறியபடி, முறையாக (மனதி) சர்வார்ப்பணமும் / பிரம்மார்ப்பணமும் / செய்து அதாவது, எல்லாம் பதுமைகளே / எல்லாம் பொம்மலாட்டமே / எல்லாம் மண்மயமே / மண்ணாகிய பரமே / பரமாகிய யாமே / யாமாகிய பரமே / என்ற அகண்டான்ம பாவனையை / திடமாய் செய்து மனதை வென்று ஜீவன் முக்தி பெறுவாயாக. ஐயமில்லால் வேறு எளிதான மார்க்கம் இல்லவே இல்லை. அதுவும் மனதை மாய்க்கும் மார்க்கமாகும்.





எப்போதும் இயம்பாமல் மௌனியாகி,
எவருடனும் கூடாமல் ஏகாந்தத்தில்,
கற்போல அசையாமல் இருந்து சற்றும்,
கலங்காத மனதுடனே ஒருமையாகி,
சற்போத சுகதனமாம் பரம் நாம் என்றே,
சந்ததமும் பாவித்து சாந்தனாகித்,
தற்போத சூனியனாய் விகல்பம் தீர்ந்து,
தற்பரமே தானாகி முக்தனுவாய்.

கருத்து :- பேச்சைக் குறைப்பது மௌனமாகும்.
பேச்சைக் குறைத்துக் குறைத்து நிறுத்துவது மோனமாகும்.
மௌனம் :- சாதனை. மோனம் :- அனுபவம்.

பேச்சை குறைக்கும் போது, வினை வசத்தால்,
சோதனையும் / வேதனையும் / பயிற்சியின் நிலையில்
வந்து தாக்கும். அது சமயம் பயம் கூடாது.
இறை குரு உணர்வோடு ஒன்ற வேண்டும்.
தன்னை சஞ்சாரம் செய்யும் ஓர் பிணமாக,
பாவனை செய்ய வேண்டும்.





இயக்க நிலையில், ஒருவனே என்றும்,
இயக்கமற்ற இருப்பு நிலையில் ஒன்றே ",
திட உணர்வு வேண்டும் உணர்ச்சி வேண்டாம்.
சத்சவம் / கலக்கபய மற்று / பிரம்மாண்ம
பாவனையில் உறுதியுடன் மஹா ஸாந்தி ஆவாய்.
இது மௌனம் உணர்த்தும் பாடல்.


---

**43**

தேகமுதல் ஒருகாலும் நாம் அன்றென்றும்;
தெரிவுருவாம் பரப்பிரம்மம் நாமே என்றும்;
பாகமுற ஒருவொருளும் இல்லை என்றும்;
பலவொருளும் பரப்பிரம்மம் தாமே என்றும்;
ஏகபரபாவனையே இடைவிடாமல்,
எப்போதும் ஆனந்தமாக செய்வாயானால்,
மோஹமெல்லாம் ஒழிந்துடனே முக்தனவாய்.
மொழிந்ததிவோர் ஐயமில்லை ஸத்தியம்தான்.

கருத்து:- மனித உடலும்; மற்றும் ஜீவராசிகள்
உடலும் நாமும் / அல்ல. நம்முடைய
தும் / அல்ல. எல்லாம் பதுமைகள் என்றும்
உணரவாம்.

பாடல் 43



77

அந்தந்த வடிவம் தாங்கி
ஸ்ரீ பகவானே நடத்துகிறான், நடிக்கிறான்.
எல்லாம் மண்மயமே! மண்ணாகிய பரமே!
பரமாகிய நானே! என்ற ஏகபர பாவனை!
செய்தால், மோக்ஷ வழி அறியபடும்.
ஜீவன் முக்தனும் ஆவாய் இது ஸத்தியமே.
இது பர பாவனையை உணர்த்துகிறது.


44

நற்பிரம்ம விவேகவழி உள்ளதீரர்,
நாரிமுதல் சுகந்திரச்சை பண்ணும் போதும்,
பற்பலவாய் தோன்றயிடும் அந்தசுகத்தையெல்லாம்
பரப்பிரம்ம சொரூபசுகம் எனவே ஓர்ந்து,
கற்பிதமாம் விஷயசுகம் அனுபவிக்க,
(நீ) கனவிலுமே கருதாது தைரியத்தோடு,
அற்பமில்லா அகண்டபர சுகமே சேர,
அகண்டபரஞானபவம் அடைய வேண்டும்.



கருத்து:— குடும்பஸ்தர்களாகிய இவ்வற ஞானிகள்! ஆணும் பெண்ணும் விழிக் விடு! வசந்தால்: தூவ இன்பம் அனுபவிக்கும் கடைப்பிடிக்கும் வழிமுறைகள்:— போதும்.

1. இறைக் குரு நாமஸ்மரணையுடன் எல்லாம் நீயே என் இருக்க வேண்டும்.
2. காமரஸனையான பேச்சுகளை நாசம் செய்ய வேண்டும்.
3. அங்கங்களின் சிருஷ்டியின் ஆதாரம் என்றும்; அவை மாம்ஸ பிண்டங்கள் என்றும் எண்ண வேண்டும்.
4. வினை முடிவுறுகிறது, என எண்ண வேண்டும்.
5. வினைப் புதுமைகள் வினையின்படி ஆடிக்களிக்கிறது. அதனால் வினை ஆடி கழிகிறது என எண்ண வேண்டும்.
6. இயங்காநிலையில் பிரம்மம் மௌனமாக இருக்கிறது. இயங்கும் நிலையில் ஸ்ரீ பகவானின் மாயா இயங்கி வைத்து வினையை முடிக்கிறது என ஆனந்தம் அடைய வேண்டும்.



79

மேலே சொன்ன ஆறு நிலைகளில் திட உறுதி அறிவினால், எண்ணத்தை வருத்திக் கொண்டு; வினையின் கர்ம காரியத்தை தருவிகள்! செய்து கர்மாவை முடிக்கிறது.

ஆகவே மோஹம் & போஹம்! பரிபூரணம் ஆக்கப்படுகிறது.


என ஆனந்தம் அடைக. சந்தேகம்! காங்கம்! கலக்கம்! துக்கம்! பயம் வேண்டாம்.

(திறம்பட நடி நான் எனது என மயங்காதே)

## எச்சரிக்கை

1. பரஸ்திரீ & பரபுருஷ! சேர்க்கை கூடாது.
2. சூரியன் உள்ள பகல் பொழுதில் கூடவே கூடாது.
3. ஒருவருக்கொருவர் காமரஸனையான வார்த்தைகள் பேச வேண்டாம்.
4. கூடுமான வரை அச்செய்கையை குறைக்கப்படுகு.

நற்பிரம்ம விவேகவலிமை உடையவன் இவனே.






4.5


நினைவை யெல்லாம் நீக்கி மனோவாக்கு கெட்டா,
நிஜவடிவாய் நிற்பதுவே நிறைந்த முக்தி.
நினைவணுவும் வேறாக நிகழுமாகில்,
நினைவதுவே மஹத்தான பந்தமாகும்.
நினைவறவே நிற்கின்ற நிஷ்டைதானே,
நிஜமான அத்வைத நிலைமையாகும்.
நினைவறவே நிற்கின்ற நிஷ்டைதானே,
நிரதிசய ஆனந்த நிலைமையாகும்.

**கருத்து** :- எண்ணமற்ற இடம் எம் இறைகண்டாயே! என்றார் அகப்பேய் சித்தர். அதாவது இதன் பொருள்:- எண்ணம் இல்லாத இடம் இறைவனாகும். அதாவது ஸ்ரீபகவானாகும்! அதாவது ஏகசன்நிலை ஆகும். ஆனால் இது ஏ க கு ண சொருபமாகும். இதன் அடுத்த இடம், நி ர் க் கு ண மா கு ம்! (குணாதீத நிலையாகும்) இது வே ர ஹ வி ன்! யோகமாயா விளையாடுதாகும். இதை சு த் த ஸூ னி ய ம் என பரிபூரணர்கள் கூறுவர்.



81

இது பரநிலைக்கு அடுத்த கீழ் நிலை
என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
அதுவே நாம்! நாமே அது! பிரம்மம் அகம்!
அகம் பிரம்மம் என்று அகண்டாண்ம
பாவனையை ப்ரஉணர்வு பெற்றுவொழிய
பிரம்ம சாக்ஷாத்கார ஜீவன்முக்தி!
பெற முடியாது. என அந்த ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.
இப்பாடலில் கூறும் நிஷ்டை! நிரதிசய ஆனந்தம்!
எல்லாம் யோகமாயாவின் ஜாலமாகும்.
அது பரநிலையின் ஜீவன் முக்தி நிலை ஆகாது.
என ஸ்ரீமஹான்களின் திருவாக்காக அறிகிறோம்
இந்த பர உணர்வு ஜீவன் முக்தி நிலையை!
அந்த நிலையில் இருக்கும் ஒருவனே! உணர
முடியும். உணர்த்தவும் முடியும். மற்றையோரால் (இதுவல்லவே) இது முடியாது.
இது நினைவற்ற நிலை.



௪௨

46

மஹத்தான மாயையென்ன? அவித்தையென்ன?
மஹத்தான பந்தமென்ன? முக்தியென்ன?
,, சித்தமென்ன? ஜீவனென்ன?
,, ஜகங்களென்ன? ஈசனென்ன?
,, நாமமென்ன? ரூபமென்ன?
(இதை) மதிக்கின்ற மனதுடைய நினைவனைத்தும்;
மஹத்தான பரப்பிரம்ம சொரூபமன்றி;
மற்றெதுவும் இல்லையெனவே நிச்சயிப்பாய்.

கருத்து:— மாயை என்றும்; அவித்தை என்றும்; பந்தம் என்றும்; முக்தி என்றும்; சித்தம் என்றும்; ஜீவன் என்றும்; ஈசன் என்றும்; ஜகங்கள் என்றும்; கூறும் இ பி ப கு பி பு றி ற கூறுபாடுகள்! அனைத்தும்; தூலநாமரூபமோ! சூட்சும ரூபநாமமோ! அந்த ஒன்றுக்கன்னியமில்லை. அது நமக்கன்னியமில்லை.

பாடல் 46




83

இது வார்த்தையின் மாயா ஜாலம் ஆகும்.
மாயா, அறிவு, மனம் இவற்றின்
பின்னல்களாகும். இவை மூக்காலங்களிலும்,
எக்காலங்களிலும் இல்லை.
ஆனால்?
இருப்பது ஒன்றே, அது நாமே!!
எப்படி என்றால் எல்லாம் மண்ணே, மண்ணாகிய
பரமே, பரமாகிய நாமே, என உணர்ந்து கொள்.

47


அனவரதம் அகம் பிரம்ம நிச்சயத்தை,
ஆதரவோடு அதிதிடமாய் அப்பியாசிக்கின்,
மனதிலுள்ள விகல்பமெல்லாம் முன்பு தீர்ந்து,
மற்றது தான் விறகற்ற வன்னியே போல்,
தனது நிஜ அதிஷ்டான பிரம்மத்தின் கண்,
(அது) தான் தானே ஸாந்தியுறும் ஆதலாலே,
(யாம்) சொன்ன விதமாய் அகம் பிரம்ம நிச்சயத்தை,
சுகமுறவே முமூட்சுவெல்லாம் பழகல் வேண்டும்.





கருத்து:— இப்பாடலில் முக்கியமான ஒன்றை உணரவேண்டும். இடைவிடாமல், தைலதாரை போல் அகம்பிரம்ம பாவனை செய்வாயாக. அதுசமயம் உன் பிராரப்தத்தின்படி, உன் மனம் எண்ணும். உன் மனம் எண்ணியதை மாயா முடிக்கும். அங்கு உன்னிடம் ஜீவ கர்த்ருத்வம் இல்லாமையினால், ஆகாமிய வினை தொடராது. விறகு தீர்ந்தவுடன் அதைப் பற்றி எரிந்த அக்கினி அணைந்து விடுமோ, எப்படி அப்படி உன் பிராரப்தம் முடிந்தவுடன், உன் எண்ணமும் / இயக்கமாயாவும் தானே சாந்தி ஆகி விடும் என உணர்க. சர்வார்ப்பணம் பூர்த்தி ஆகவில்லையானால் மனஎண்ணமும் ஓயாது. மாயாவின் செயலும் முடியாது என உணர்க. ஆகவே சர்வார்ப்பணம் & நிஷ்காமார்ப்பணமும் முறையாக செய்யப்பட்டால் ஜீவன் முக்தி அவஸ்யம். உன் மனம் & மாயா & கர்மா ) ஆகிய விளக்கம்.


—x—x—x—x—x—x—x—x—






சொல்லும் மலின வாதனையும் மனதின் தர்மம்.
சுத்தபர வாதனையும் மனதின் (அறிவு) தர்மம்.
அவையும் ஒரு வாதனையும் பரத்திற்கில்லை.
ஆதலினால் அம்மையமாய் நிஷ்டை சார்ந்து,
மலினமென, சுத்தமென, மதிக்கப்பட்ட,
மனதுடைய வாதனைகள் ஒன்றுமின்றி.
சலனமில்லா சிலை போலும், காஷ்டம் போலும்,
சற்றேனும் சலியாமல் சுகித்திருப்பாய்.

கருத்து:— மனதிற்கு புண்ணிய பாபம் என்றும்,
அறிவிற்கு ஸத்திய தர்மம் என்றும்,
வாதனை (உபாதை) உண்டு என உணர்க.
இதை முறையாக லௌகீகம் வைதீகம் என உணர்க.
பரத்திற்கு! எந்த வாதனையும் இல்லை.
ஆகவே இந்த பரமார்த்திகமாகவே (அதுவே நாம்
நாமே அது) பரபாவனை உணர்வாய்!



86

நிலைபெற்று நின்று விட்டால் எந்த வாதனையும்
இல்லாமல் நசிக்கும்.

இப்பர பாவனையில் பட்டமரம் & கருங்கல் / போலும்
சலியாமல் இருக்க வேண்டும்.
புண்ணிய பாபம் & ஸஞ்சித கர்மம் / நிராகரிக்கும்


பாடல்

—×—×—×—×—×—×—

43

எல்லையில்லா வேதமெல்லாம் சித்தசுத்திக்கு;
ஏதுவாக உபாசனையை முன்பாங்காங்கே;
சொல்லியதால் சித்தத்தின் சுத்திபெற்றோர்;
சுகமாக மோக்ஷ நிலை சார்வதற்கே.
அல்லலில்லா ஆனந்த கனமேயான;
அகண்ட பரிபூரணமாம் பரசிவத்தில்;
கல்லெனவே அசையாமல் கலந்திருக்கும்;
களங்கமில்லா நிஷ்டையினைக் காட்டிற்று

கருத்து:— வேத, வேதாந்த, ஸாஸ்திர, [illegible]. புராண, இதிகாசங்களும், முழக்கமிட்டு கூறுவதெல்லாம் சித்த சுத்திக்காகவே / என உணர வேண்டும்.






அவைகள் ஆத்ம ஞானத்திற்கு வழி.
ஆத்மஞானத்தை சென்றடையும் படிகள்!
ஆகும் என உணர்க. அவைகள் ஆத்மஞானம் வழி.
அதன் வழியே படி ஏறிச் சென்றால் ஆத்ம ஞானம்
என்ற மாடியை! அடைய முடியும் என உணர்க.
அவைகள் ஏழுக் கக்கட்டுப் பாட்டின் படிகள் ஆகும்.
அவைகளில் ஏறிச் செல்லும்போது, சந்தேக
தவக்க மயமின்றி; அசையா! அசைக்கா!
கருங் கல்லைப் போல் இருக்க வேண்டும் என உணர்க.
சித்த சுத்தியளிக்கும் பாடல்.

---


**50**

காலமுதல் கற்பனையே இல்லாமையாலே;
காண்கின்ற காட்சிமுதல் இருப்பதெங்கே?
தூலமுதல் காத்திரமே இல்லாமையாலே;
தொடர்கின்ற பவபந்தம் இருப்பதெங்கே?
மூலமதாம் அஞ்ஞானம் இல்லாமையாலே;
மூளாக்கின்ற அதன் செய்கை இருப்பதெங்கே?
ஆலயமாம் பரப்பிரம்மம் அனைத்தும் என்றும்;
அதுதானே அகமென்று அநுசந்திப்பாய்.





கருத்து :- சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம்!
என்றும்; நேற்று, இன்று, நாளை, என்றும்;
மூன்று காலமும் இல்லவே இல்லை. ஆகவே
உற்பத்தி, என்றும்; ஒன்று வந்தது! என்றும்; சொல்லும்
எந்த நாம ரூப காட்சியும் இல்லை.
தாவ, ஜட, சொரூப, சுட்டங்கள்!
இல்லவே இல்லை. அப்படியானால் அவைகளை தொடரும்
புண்ணியபாபம் & சொர்க்கம் நரகம்! எனச் சொல்லும்
பவம் & பந்தம் எப்படி இருக்கமுடியும்? மேலே
சொன்ன அவ்விரண்டிற்கும் மூலமான (மாயா)
அஞ்ஞானம் இல்லவே இல்லை அப்படியானால்?
அதன் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம்! என சொல்லும்
காரிய ஹிருத்தியங்களும் இல்லவே இல்லை
இருப்பது ஒன்றே! அது தோன்றும் நிலையில் பதுமைகளே!
அது இருப்பு நிலையில் மண்ணே! மண்ணாகிய பரமே!
பரமாகிய நாமே! என சும்மாவே சுகமாக இரு.
காலம்! மாயா! அதன் காரியம் இல்லை.




ஒருவரும் ஒருகாலும் ஜனிக்கவில்லை.
ஒருகாலும் ஜனியாதது இருப்பதெங்கே?
விரிவுறவே ஜனியாதது மற்றும் யாதும்;
வீதலடைந்திடுமென விளம்பலெங்கே?
அரியவனே! ஆதலினால் அகண்டமான;
அத்வைத பிரம்மத்திற்கு அயலே இல்லை.
சர்வமுமே பிரம்மமென்றும்; அது நாமென்றும்;
சலியாத பாவனையால் ஸாந்தனவாய்.

கருத்து:— எவரும், எதுவும், நாமரூபமாக, ஜனிக்கவில்லை, உண்டாகவில்லை.

அப்படி ஜனியாதது இங்கே, இப்படி, இருந்தது என்றோ, இருக்கிறது என்றோ, இருக்கும் என்றோ, சொல்லமுடியாது, சொல்லக்கூடாது, சொல்ல இயலாது.

அப்படி விரிவடைந்த ஜனியாதவைகள், ஜனியாதவர்கள், கெட்டுப்போயின என்றும், அழிந்தன என்றும், எப்படி சொல்ல முடியும்? இது அப்பட்டமான பொய்யாகும்.



90

ஆறைவ் அகண்டமான மண்ணே!
பரந்து! விரிந்து! எங்குமாய்! எல்லாமாய்! ஏகமாய்!
இருக்கிறது என்பதே ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!
இயக்க நிலையில் மண் பதுமைகளே!
இருப்பு நிலையில் அகண்டமான
மண்மயமே. அது நாமே! நாமே அது!!


**பரிபூரண பரம்பொருளே!!!**

என சற்றேனும் சலியாமல் ஸாந்தனவாயாக.

52


எப்பொருளும் எங்கேனும் இருக்குமாகில்,
இவ்விதமாய் அது உளதான அயம்பல் வேண்டும்.
ஸித்பொருளே யன்றி ஒருபொருளுமென்றும்;
சிறிதுமில்லாத் தன்மையினை அயம்புதற்கிங்கு;
அற்பவுமே இடமில்லை ஆதலாலே;
அகண்ட பரப்பிரம்ம வடிவான எம்மில்;
சொற்பொருளோ ரணுவுமில்லை யென்றெப் போதும்;
சும்மாவே இருந்து மிகச்
**ஸாந்தனவாய்.**

குறிப்பு:— ஒரு உணர்வுபூர்வமான கேள்வியை கேட்கிறார்.



91

கருத்து:- 84 லக்ஷம் ஜீவகோடிகள்!
என்றும்; (ஊர்வன! பறப்பன! நடப்பன! நீந்துவன)
மனம் படைத்த மனித இனம் என்றும்
தாவர வர்க்கங்களென்றும்;
சொல்லும்; அசைவன! அசையாதன!
அனைத்தும் இருக்கிறதென்று சொல்கிறாயே!!!
உனக்கு அறிவே இல்லையே ஐயா!!!
எதுவாயினும்! எவராயினும்!
மண்ணுக்கண்ணிடமில்லையல்லவா?
இது இப்படி இருந்தது! இருக்கிறது! இருக்கும்! என்றே,
இவர் ,, இருந்தார்! இருக்கிறார்! இருப்பார்! ,,
(இதுவே மூன்று காலங்களுக்கும் உபடுகிறது என உணர்த்த)
நீ கூறும் அனைத்தும்! அனைவரும்!
வந்து! இருந்து! மாறி! மறையக்கூடியவைகள் தானே?
ஏதாவது ஒன்று நிலையானதா? உணர்.
ஆண்டியும்! அரசனும்! யோகியும்! ஞானியும்!
எனத்தோன்றிய அவர்களில், நாம ரூப தாவங்கள்



92

ஒன்று உண்டு இன்று இருக்கிறதா? என உணர்வாய்.
ஆனால் அவர்கள் இருக்கிறார்கள்.
எப்படி என்றால் அந்த ஒன்றுக்கு தூலமாக இல்லை
தோற்ற நிலையில் மண்ணாக இருக்கிறது.
தோற்ற நிலையில் பரமாக ,, .
ஆனால் நாமரூபமாக எதுவும் / எவரும் / இல்லை.
இப்பாடலை கவனிக்கவும்.
எந்த பொருளாவது அல்லது எவராவது இப்படி
இருக்கிறது என்றோ; இப்படி இருக்கிறார்கள் என்றோ
காணவும் / சொல்லவும் / இயலவில்லை.
காலாதீத ஸத் சொரூபமே / தானே இருப்பு நிலையில்
ஸித்தாகி / இயக்க நிலையில் மனம், புத்தி, சித்தமாகி /
அதுவே நாம ரூப / ஜக ஜீவ / அனேகத்துமாயிருக்கிறது,
இந்த நாமரூப ஜகமே / சொல்லும் பொருளும்
அதாவது வாக்கும் அதன் விளக்கமாகவும் இருக்கிறது என உணர்க.



53

அந்த சொல்லும் வாக்கும் அற்று

ஐக்கநிலையில் ஒருவனே! இருப்பு நிலையில் ஒன்றே!

அது நாமே! நாமே அது! என சும்மா சுகமாயிரு.

நாம ரூப அரூப நிலை என உணர்த்துகிறது.

53

சகலமுமே பிரம்மமென்னும் நிச்சயத்தால்;
ஜகமுதலிது உண்மையென்னும் பிராந்தி நீங்கும்.
தேகம் பிரம்மம் நாம் என்னும் நிச்சயத்தால்;
தேகமுதல் நாம் என்னும் பிராந்தி நீங்கும்.
தருமகனே! ஆதலினால் எல்லாம் என்றும்;
தற்பிரம்மம் தாம் என்றும்; அது நாம் என்றும்;
வெகுதிடமாம் அனுபூதி அடைந்தே போதும்;
வேறறவே மிகவும் உபசாந்தனவாய்.

கருத்து:- எல்லாம் பிரம்மமே என்று நிச்சயம்

செய்தால்; நாம் ரூப! ஜக ஜீவ! தோற்றம் உண்மை

என்று நம்பும்; மனப் பிராந்தி! நாசமாகும்.



94

தர்மா ஹிறைவு! நிகழ்வதும்! நிகழ்ந்ததும்!
நிகழ இருப்பதுவும்! எல்லாம் பிரம்மமே!
என்று உறுதி நிச்சயம் செய்தால்.
சரீராதிகள்! நாம்! என மயக்கும்.
மனப்பிராந்தி! நாசமாகும். ஆகவே
எல்லாம் பொம்மைகளே! எல்லாம் மண்மயமே!
மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என்று உறுதி
நிச்சயம் செய்வீராக.


மனப்பிராந்தி நசிக்கும் பாடல்.

—×—×—×—×—×—×—×—×—

54

பதம் பதமாய் சொல்லியிருக்கும் நாமம் இல்லை.
பதார்த்தமென சொல்லியருளும் உருவம் இல்லை.
விதவிதமாய் விளங்கிய எப்பொருளும் இல்லை.
விரிந்த ஜக ஜீவபரம்! எவையும் இல்லை.
சுதந்திரமாய் ஒருகாலும் ஒன்றுமின்றி.
சுத்தமதாய் உள்ள பரப்பிரம்மம் ஒன்றே.
நிகழ்ந்த விராது அப்பிரம்மம் நாமே என்று
நிலை பெற்ற ஞானத்தால் முக்தனாவாய்.


பாடல் 54



95

கருத்து:— பதம்பதமாக பிரித்து, பிரித்து!
சொல்லும் ஜக நாமமும்! ஜீவ நாமமும்!
பொருள் நாமமும்! ஈச நாமமும்! மாயா
நாமமும்! வேறு எந்த நாமங்களும்!
இல்லவே இல்லை. பிரணவாஹார ஒலியே!
சொல்லின்க்கீத்துன் நிமித்தம்
இருந்த காது! ஆதிஸ்ரீமஹான்கள் சொல்வர்.
பதார்த்தம் என்றும்; பத அர்த்தம் என்றும்,
போனப்பொருளோ! பதமுக்தபொருளோ! ஒருகாலும்
இல்லவே இல்லை. பொருளோ! பொன்னே! எவ்வாம்
மண்ணே! மண்ணையன்றி அன்னியமாய்,
இங்கும்! அங்கும்! எங்கும்! ஏதும் இல்லவே இல்லை.
மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! நாமாகிய பரமே!
என்றிட உறுதியின் வைராக்கியத்தால், கருங்
கல்லிப்போல், அசைவற்ற ரூபமாக.
நாமரூபங்களும் இசையும் இல்லையென உணர்த்துகிறது.

—x—x—x—x—x—x—x—x—





55

இல்லையென இயம்பியிடும் ஒருவரும் இன்றி,
இங்குளது என்றியம்பியிடும் ஒருவரும் இன்றி,
சொல்லியிடும் சொற்பொருளோர் அணுவும் இன்றி,
சும்மாவே இருந்து மஹா மௌனியாகி,
அவ்வவிலீவா அகண்ட பரானந்தம் மேவி,
அநாதி பவதுக்கங்கள் அனைத்தும் தீர்ந்து,
கல்லெனவே திடமான பரஞானத்தால்,
கற்பனையோர் அணுவுமில்லா(த) முக்திசார்வாய்.

கருத்து :—

அதை இல்லையென சொல்லவும் முடியாது.
" உண்டு என சொல்லவும் முடியாது.
ஆனால் அது நாம ரூப குணம் குறியாக இல்லை.
" " அகண்ட பேரொளியாக உண்டு.
உதாரணம் மண்மயமாகவே உண்டு.



97


ஆறில் அங்கு இல்லை யென்ற வாக்கும் இல்லை.
,, ,, உண்டு ,, ,, ,,

சொல்லும் பொருளும் இல்லை. சொல்லும் நாமமும்!
நாமத்தின் (பொருளும்) தோன்ற உருவமும்!!
இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை!

ஆ.................தீ.................வே?

அல்லலில்லாத (துன்பமில்லாத)
ஆனந்தமயமான (இன்பதுன்பமில்லாத)
பரப்பிரம்மமான
நித்தசாக்ஷாத்கார (அனுபவ பயதுக்கங்கள் இல்லாததான)

பிரம்மஞானத்தில் (அசையாத / அசைக்காத)
இருங்கள் இப்போன்று!
கற்பனைக் கெட்டாத ஜீவன்முக்தி!
அடைந்து சும்மா சுகமாக இருக்கக் கடவாய்.
கற்பனைக் கெட்டா நிஜ சொரூபம்.




98

56

சந்ததம் நாம் பரப்பிரம்ம சொரூபமன்றி,
சற்றேனும் ஸம்ஸாரி அல்லவென்று,
இந்தவிதம் அறிவுற்று ஜலத்தில் சேர்ந்தங்கு,
ஏகரஸமாகின்ற லவணம் போல.
அந்தமில்லா அகண்ட பரப்பிரம்மத்தின் கண்,
ஐக்கியமே அடைந்த மனோ விருத்திதானே,
மைந்தா! அகண்டாகார விருத்தியென்று,
மாசற்ற ஞானிகளால் மதிக்கலாகும்.


கருத்து :— எந்த விநாடியும் / நாம் ஸம்ஸாரி / என்ற குடும்பி என்று, எண்ண வேண்டாம். சமுத்திரத்தில் தோன்றிய உப்புப் பதுமை / சமுத்திரத்திற்கன்னியமில்லை. அதேபோல் நாம் பிரம்மத்திற்கன்னியமில்லை எனுதிட உணர்வோடு நம்புவராக. உப்புப் பதுமையாகிய நாம் நான் / எனது / என்ற ஜீவகர்த்ருத்வதால் / நாம் தோன்றிய நம் இடமாகிய சமுத்திரத்தை மறந்துவிட்டோம் என உணர்க.



99

மறந்ததை ஞாபகப்படுத்துகிறோம். உன்
ஜீவ கர்த்ருத்வம் நாசமான மறுபிறவியே!
நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? நாம்
என்ன செய்யவேண்டும்? என்ன செய்து
கொண்டிருக்கிறோம்? என்ற விசாரம் கிரியா
ரூபமாகவே! அனுபவ அறிவு பூர்வமாக
ஸ்பஷ்டமாக விளங்கும் என உணர்க. இப்படி
உணர்ந்து பிரம்மானந்த சமுத்திரத்தில்
கரைந்து மயமாவதே அகண்டாகார விருத்தி!
என ஞானிகள் சொல்வர்.
அகண்டாகார விருத்தியின் விளக்கம்.

57 தேக முதல் நாம் என்னல் துவைத விருத்தி.
திகழ் சாட்சி நாம் என்னல் சாட்சி விருத்தி.
ஏக பரம் நாம் என்னல் அகண்ட விருத்தி.
இம்மூன்று விருத்திகளில் இரண்டைத் தள்ளி;
ஆகும் அகண்டாகார விருத்தி தன்னை;
அநவரதம் ஆதரவாய் அப்யாசித்து;
சோக முறும் சித்த விகல்பம் தீர்ந்து;
சொன்ன அகண்டைக ரஸ ஸ்வரூபமாவாய்.



100

கருத்து :- (A) துவைத விருத்தி :- சரீரத்தை நான் என்றும், மற்றும் உடைமைகளை எனது என்றும் எண்ணுவது துவைத விருத்தி.

(B) சாட்சி விருத்தி :- பேதம் & விருப்பு வெறுப்பு & குற்றம் குறைகளை நாசம் செய்து; எல்லாம் ஒருவன் செயலே பொருளே! எல்லோரும் நல்லவரே! நடப்பது நல்லதே! என பேதம் களைவது சாட்சி விருத்தி ஆகும்.

(C) 84 லக்ஷம் ஜீவ கோடிகளும் (மனிதனை உட்பட) அண்ட பிண்ட சராசரங்களும் எல்லாம் மண்ணுக்கண்ணியமில்லை என்று ஓர்மித்த நிலையில், நாமும் அதுக்கண்ணியமில்லை என்றறிதல் உணர்வு அகண்டாகார விருத்தியாகும்.

மேலே சொன்ன துவைத விருத்தியையும் சாட்சி விருத்தியையும் நாசம் செய்ய வேண்டும்.





அகண்டாகார விருத்தியை அறிவுபூர்வமாக

அனுபவநிலையில் ஏற்க வேண்டும்.

இது அகண்ட ஐக்கிய ரூபமாகும்.


58

சர்வ மஹாமந்திரமும் உபதேசிப்போர்
சாமான்ய குருவெனவே சாற்றலாகும்.
இருமையில்லா பரப்பிரம்மம் நீயே என்று
இணையற்ற உபதேசம் செய்கின்றேனே
பெருமை மிகும் ஸத்குருவென்று உரைக்கலாகும்
பின் வெகுவாய் பேசுவதால் பெறும் பேறென்ன?
அரிய பரம் நீயென்போன் ஆசானவான்.
அகம் பிரம்மம் என அறிவோன் மாஞானவான்.

கருத்து :— ஏழுகோடி மந்திரங்கள் உண்டென்று ஸ்ரீ மஹான்கள் சொல்வர். அப்படிப்பட்ட மந்திரங்களை உபதேசிப்போர் சாமான்ய குருவெனவே! சொல்லக்கூடும். ஆனால்

இரண்டற்ற பரம்பொருள்! நீயே

102



என்று ஆன்ம உபதேசம் செய்கின்ற
வன் எவனோ அவனே ஸத்குரு வாகும்.
ஏனையோர் ஸத்குரு ஆகார். ஸாமானிய குரு ஆவர்.
அந்த ஒன்றே நினைவோன் ஸத்குரு ஆகும்.
அகம் பிரம்மம் என உணர்வோன் ஸத்சீடனாவான்.
ஸத்குரு & ஸத்சீடன் பெருமையை கூறுவது.

59

பொருந்திட நிதம் செய்கின்ற சிரவணத்தால்,
புகலும் அஸம்பாவனை தான் முன்பு நீங்கும்.
வருந்திட நிதம் செய்கின்ற மனனம் தன்னால்,
வாளாவாம் சம்ஸயபாவனையும் நீங்கும்.
விரிந்து நிதம் செய்கின்ற நிதித்தியாசத்தால்,
விபரீதபாவனையும் நீங்கும் போது,
நிரந்தரமாம் பரப்பிரம்ம சாக்ஷாத்காரம்,
நிச்சயமாம் தன் மனதில் நிகழுமன்றே.



103

கருத்து: (A) பொருந்தி செய்வது சிரவணம்:-
சர்வார்ப்பணத்தால் ஜீவர்களை பொருத்து-
பிரம்மார்ப்பணத்தால் ஜடம் / கடம் / படாதிகளை /
பொருத்துக. ஒன்றென
பழக்க வழக்க தோஷத்தில் சிக்கியும் உடனே
ஏற்காது. சந்தேகத்தால் திரும்பும்.

(B) வருந்தி செய்வது மனனம்:- ஓர்நாம ரூப மூர்த்தி
ஸ்ரீபகவானிடம் / விண்ணப்ப முறையில் ஏக்கம்
உருக்கம் / கண்ணீர் பெருக்கத்துடன் / மனம்
வருந்தி வரயாகம் மனம் பொங்கி அமைதியாகும்.

(C) விரிந்து செய்வது நிதித்தியாசமாகும்:-
எல்லாம் பொம்மைகளே / எல்லாம் பொம்மலாட்டமே /
எல்லாம் மண்மயமே. மண்ணாகிய பரமே /
பரமாகிய நாமே / நாமாகிய பரமே / என அனுபவத்தில்
எல்லாம் ஒன்றென ஆக்கு. முதலில் அஸம்பாவிதம்
நாசமாகும். இரண்டாவது சந்தேகம் நாசமாகும்.
மூன்றாவது விபரீத தோஷம் நாசமாகும். அத்தநொடியில்
நிரந்தரமான பரப்பிரம்ம சாக்ஷாத்காரம் இயல்பாகும்
சிரவணம் / மனனம் / நிதித்தியாசம் / முறையாக
யோசித்தால்.



அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!